வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : news@eelanadu.lk மலர் : 03 29.11.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 356 பக்கங்கள் : 16

# கிழக்கையும் சமமாக நடத்தினால் தீர்வுக்கு நாம் தடையாக மாட்டோம்!

## அரசை விட்டு விலகவும் தயார் என்கிறார் பிள்ளையான்



கொழும்பு, நவ. 29

கிழக்கு மக்களையும் இணையாக நடத்தக்கூடிய திட்டமிடலுடன், தெளிவான அரசியல் தீர்வுடன் பயணிக்கும் திட்ட வரைவை முன்வைத்தால் அவ்வாறான தீர்வு முயற்சிக்கு தடையாக இருக்கமாட்டோம். அப்படியான சூழல் வந்து தென்னிலங்கையின் எழுச்சிக்கு முகம்கொடுக்கும் சூழலை உருவாக்கவேண்டும் என்றால் இப்போதுள்ள நிலைமையிலிருந்து மாற்று சிந்தனையைகூட பரிசீலிக்க தயார் என்று தெரிவித்திருக்கிறார் பிள்ளையான் என்று அறியப்பட்ட இராஜங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன். 15

## மாகாண சபை முறைமையை ஆளுநர் கேலிக்கூத்தாக்குகிறார்

### வட மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சாடல்!

யாழ்ப்பாணம், நவ. 29

சட்டவாக்கத்துக்கும் நிறைவேற்று செயல்பாட்டுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல் வடக்கு மாகாண ஆளுநர் மாகாண சபை முறைமையை கேலிக்கூத் தாக்கக்கூடாது என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சி. தவராசா.

வடக்கு மாகாண சபை ஆளுநர் சட்ட விரோதமாக இரு நியதிசட்டங்களை உருவாக்கி வர்த்தமானியாக வெளியிட்டுள்ளார் என்ற விடயம் பெரும் 15

### பொருளாதார நெருக்கடி குறித்து ஆராய

## அமெரிக்கா பயணமாகிறார் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, நவ. 29

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அமெரிக்காவுக்கு இன்று செவ்வாய்க்கிழமை பயணமாகிறார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தில், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.

மேலும், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க இராஜாங்க செயலர் அன்ரனி பிளிங்கிங் மற்றும் அந்நாட்டின் உயர்மட்டப் பிரதிநிதிகளையும் சந்திகவுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## 25 இந்திய மீனவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 29

நெடுந்தீவு கடல்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 25 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன், அவர்கள் பயணித்த 5 படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து ட்றோலர் படகுகளிலிருந்து 15

## ஜனாதிபதியை நம்பலாமா இனப் பிரச்னைத் தீர்வில்?

### இப்படி கேட்கிறார் ஜீ. எல். பீரிஸ்

கொழும்பு, நவ. 29

இனப்பிரச்னைக்கு தீர்வு வழங்குவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை கொண்டிருந்த அனைத்து அரசாங்கங்களும் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இவ்வாறான நிலையில் இனப் பிரச்னைக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுவதை எவராலும் நம்ப முடியுமா என முன்னாள் வெளிவிவகாரத் துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சபையில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு - செலவு திட்ட உரையின் போதே 15

## இனப் பிரச்னைக்கு தீர்வு நாம் பயன்படுத்த வேண்டும்!



கொழும்பு, நவ. 29

சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்னைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். அவரின் இந்த முயற்சியை நாங்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். அத்துடன், மனித 15

## போர் வெற்றிகொள்ளப்பட்டாலும் சமாதானம் வெல்லப்படவில்லை!

### இராஜாங்க அமைச்சரே கூறுகிறார்

கொழும்பு, நவ. 29

2009 ஆம் ஆண்டு யுத்தம் வெற்றி கொள்ளப் பட்டாலும் நாட்டில் சமாதானம் வெற்றி கொள்ளப்படவில்லை. புரையோடி போயுள்ள பிரச்னைகளுக்கு நிலையான தீர்வு காணும் தேவை தற்போது காணப்படுகிறது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிக்க ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகாரத் துறை இராஜாங்க அமைச்சர் தாரக பால சூரிய தெரிவித்தார். 15

## ஜனவரியிலேயே புதிய அமைச்சரவை?

கொழும்பு, நவ. 29

அமைச்சரவையை மாற்றி அமைப்பதற்கான நேரம் இதுவல்ல. எதிர்வரும் ஜனவரி மாதத்தில் புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் என்று தம்மைச் சந்தித்த பஸில் ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் அரச தரப்பின் உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

பஸில் ராஜபக்ஷ அண்மையில் நாடு திரும்பியிருந்தார். நாடு திரும்பிய அன்றிரவே அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசினார். இதன் போது, வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்படும் நாளன்றே - டிசெம்பர் 15

## பால் மா விலை மீளவும் உயர்கிறது

கொழும்பு, நவ. 29

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பால் மாவின் விலையை 175 ரூபாயால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 450 கிராம் பால் மா பைக் கெற்றிக் புதிய விலை 1,150 ரூபாயாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## வியட்நாமில் உயிரிழந்தவரின் உடலை அங்கேயே அடக்கம் செய்வதற்கு திட்டம்

### குடும்பத்துடன் பேசுகிறோம் என்கிறார் அலி சப்ரி

கொழும்பு, நவ. 29

வியட்நாமில் உயிரிழந்த இலங்கையரின் உடலை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு 30 இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும். அதற்கான நிதியை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், அவரின் உடலை அங்கேயே அடக்கம் செய்வது தொடர்பில் அவரின் குடும்பத்தாருடன் பேச்சு 15

## இப்படியும் நடக்கிறது...!

முன்னரும் இந்தப் பத்தியில் முல்லா பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். துருக்கியில் வாழ்ந்த ஓர் அறிஞர் - கல்விமான். முல்லா என்பதே அறிஞர் அல்லது கல்விமான் என்பதைக் குறிப்பதுதான்.

அவர் பற்றிய பல கதைகள் உண்டு. அவற்றில் ஒன்றுதான் இது.

ஓர் ஊரில் ஒரு பள்ளிவாசல் இருந்தது. அங்கே தொழுகை நடந்து கொண்டிருந்தது. முல்லா அந்த வழிபாட்டை முன்னின்று நடத்திக்கொண்டிருந்தார்.

'கருணையும் இரக்கமும்மிக்க ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியரான அல்லாவின் திருப்பெயரால்..' என்று அவர் சொல்லிக்கொண்டிருந்த சமயத்தில் குருநானக் அங்கு வந்தார். அவர் முகத்தில் புன்முறுவல். முல்லாவுக்கு கோபம் வந்து விட்டது.

'ஏன் சிரிக்கிறாய்?' என்று கேட்டார் முல்லா.

'நண்பா! நீ செய்வது தொழுகை அல்ல. அதனால் சிரிக்கிறேன்' என்றார் குருநானக்.

'என்ன சொல்லுகிறாய்? தொழுகை இல்லையா?' திரும்பக் கேட்டார் முல்லா.

'ஆமாம் உன்னுள்ளே பிரார்த்தனை என்பதே இல்லை' என்றார் குருநானக்.

முல்லாவின் கோபம் இன்னும் அதிகமாயிற்று. நேராக ஒரு நீதிபதியின் முன்னால் போய் நின்றார். 'நீதிபதி அவர்களே! இந்த ஆள் நாங்கள் தொழு கிறவேளையில் பள்ளிவாசலுக்குள் நுழைந்தார். அதுமட்டுமல்ல, வழிபாடு செய்கிற எங்களைப் பார்த்துச் சிரிக்கிறார். இவருக்கு நீங்கள் தண்டனை வழங்க வேண்டும்.'

நீதிபதி குருநானக் பக்கம் திரும்பினார், 'நீங்கள் சிரித்தது உண்மையா?'

'உண்மைதான்'

'ஏன் சிரித்தீர்கள்?'

'அவர் செய்தது பிரார்த்தனை அல்ல. அதனால் சிரித்தேன். அவரை நான் சில கேள்விகள் கேட்க தாங்கள் அனுமதிக்க வேண்டும்' என்றார் குருநானக்.

முல்லா வந்து முன்னால் நின்றார். அவர் கையில் ஒரு புனித குர்ஆனைக் கொண்டு வந்து கொடுங்கள் என்றார் குருநானக். கொடுத்தார்கள்.

'இப்போது சொல்லுங்கள்... உங்கள் உதடுகள் அல்லாவை உச்சரித்த வேளையில் உங்கள் மனம் வீட்டிலே விட்டு வந்த கோழிகளை நினைத்ததா? இல்லையா?'

முல்லா கையில் குர்ஆன் இருந்தது. உண்மைதான் என்று முல்லா ஒப்புக் கொண்டார்.

குருநானக் விடுவிக்கப்பட்டார்.

இந்தக் கதைதான் அதுபற்றி அறிந்தபோது ஞாபகத்துக்கு வந்தது.

குறித்த காலத்துக்குள் பட்டம் பெறாத மாணவர்களை பல்கலைக்கழகங் களில் இருந்து நீக்குவது தொடர்பான சட்டமூலமொன்றை பாராளுமன்ற த்தில் கொண்டு வர கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி கற்பதைவிட அரசியல் பணியை மேற்கொள்வதே முக்கியம் என நினைத்து மாணவர்கள் சிலர் 9 முதல் 10 வருடங்கள் பல்கலைக்கழக விடுதி களில் தங்கி இருக்கின்றனர் என்று கிடைத்த தகவலின் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இதுதான் அந்தச் செய்தி. ஒரு மாணவனுக்கு பல்கலைக்கழகம் புகுவ தென்பது கனவு. அந்தக் கனவு நிறைவேறி விட்டால் அதில் கிடைக்கும் மகிழ்ச்சி அளவிடற்கரியது. அங்கே போவது கல்வியறிவை பெற்று இந்த நாட்டுக்கும் சமூகத்துக்கும் பங்களிப்பு செய்வதற்காகவே. அங்கே வெறும் புத்தகக் கல்வியை மாத்திரமன்றி, ஆளுமைகளையும் விருத்தி செய்யவேண டும் என்பதற்காகவே மாணவர்கள் மத்தியில் பல்வேறு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால், அந்தச் சங்கங்கள் குறிப்பாக, மாணவர் சங்கத்தில் தலைவராக இருப்பது என்பது இலங்கையில் அரசியலுக்குள் நுழைவதற்கான ஆரம்பப் புள்ளியாக பலரும் கருதுவதுண்டு. அதனால்தான், இந்த மாணவர் சங்கங் கள் பல அரசியல் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன.

ஆனால், அந்த மாணவர் சங்கங்களில் கிடைக்கும் அரசியல் செல்வாக்கை இழக்க விரும்பாத சில மாணவர் தலைவர்கள் தாம் பல்கலைக்கழகத்துக்கு சென்றதன் உண்மையான நோக்கத்தையே மறந்து கல்வியில் கவனம் செலுத்துவதில்லை என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

அண்மைக்காலமாக 'அறகலய' என்ற போராட்டக்காரர்கள் நாட்டில் பிரபல்யமானார்கள். அவர்களில் ஒருவர், பயங்கரவாத தடைச் சட்டத்தி லும் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவருக்கு வயது முப்பத்தி ஒன்று. அப்படியெனில் அவர் பல்கலைக்கழகத்தில் எத்தனை ஆண்டுகள் படித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் ஊகிக்கலாம்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக பல்கலைக்கழகத்தில் மாணவனாகவே இருந்து கொண்டிருக்கின்றார் அவர். காரணம் வேறு ஒன்றுமல்ல, பரீட்சை யில் தோற்றி பல்கலைக்கழகத்திலிருந்து வெளியே வந்துவிட்டால், அவர் பல்கலைக்கழக மாணவர் தலைவர் என்ற அந்தப் பதவியை இழந்துவிட வேண்டியிருக்கும்.

அதற்காகவே, பல்கலைக்கழகத்தில் பரீட்சைக்கு தோற்றாமலே மாணவ னாகவே காலம் கடத்திக்கொண்டிருக்கிறார்.

இப்படி பலர் இருந்து கொண்டிருக்கின்றனராம். அவர்களைப் பல்க லைக்கழகத்திலிருந்து வெளியேற்றுவதற்காகவே புதிய சட்டங்களைக் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றது.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கும் - அதுவும் இலவசக்கல்வியை வழங்குவதற்காகவும் இந்த நாடு பெருந்தொகையான பணத்தை செலவிட்டு வருகின்றது. அதாவது மக்களின் வரிப்பணத்தில்தான் மாணவர்கள் இலவ சக் கல்வியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

அதனை துஷ்பிரயோகம் செய்வதும் ஒருவகையில் ஊழல்தான். தங்களையே ஊழலுக்கு எதிரான மீட்பர்களாக காட்டிக் கொண்டிருப்பவர் களும் அதையே செய்துகொண்டிருக்கின்றார்கள்.!

மேலே முல்லாவின் கதையில் குருநானக் சுட்டிக்காட்டியதுபோல, பிரார்த்தனை செய்தால் அல்லாவை மாத்திரமே நினைக்கவேண்டும். அது போல, பல்கலைக்கழகம் போனால் கல்வி... கல்வி.. அதுவே மாணவர்க ளுக்கு முதன்மையானதாக இருக்கவேண்டாமா?

- ஊர்க்குருவி

## பொன்னாலையில் காற்றாலை மின்கோபுரம் அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், நவ. 29

பொன்னாலையில் காற் றாலை மின் உற் பத்திக் கோபுரங்கள் அமைப்பது தொடர் பான கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

பொன்னாலை தொடக் கம் அராலி வரை யான கடற் கரையோரத்தில் 15 காற்றாலை கோபுரங்களை அமைப்பதற்கு "முசல்பெற்றி வைண்ட் பவர்" நிறுவனத்தால் இடங்கள் தெரிவுசெய் யப்பட்டுள்ளன.

இந்தக் கோபுரங்களை அமைப்பதில் உள்ள சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டுவதற்காக இக் லந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் கலந்துகொண்டி ருந்த துறைசார்ந்த அதிகாரி களும் மக்கள் பிரதிநிதிகளும் இந்தக் கோபுரங்களின் சாதக, பாதக அம்சங்கள் தொடர்பாக கேள்விகளை எழுப்பியிருந்தனர். குறித்த நிறுவன உத்தியோகத்தர்கள் அதற்கு ரிய பதில்களை வழங்கினர்.



இதன்போது, இடத் தெரிவு தொடர்பாக கிராம மட்டத்தில் பொதுமக்களுடன் கலந்து ரையாடி இறுதி முடிவு எடுப்பது எனத் தீர்மா னிக்கப்பட்டது.

மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத திட்டங் களாயின் அதனை செயற்படுத்த முடியும் என இங்கு கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதி களும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதி களும் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் வலி.மேற்கு பிர தேச சபைத் தவிசாளர் த. நடனேந்திரன் மற் றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

## உயர்தர பரீட்சைக்கு தோற்ற 80வீதமான வருகை கட்டாயம்!

கொழும்பு, நவ. 29

க.பொ.த உயர்தரப் பரீட் சைகளுக்கு தோற்றும் மாணவர் களுக்கு 80 சதவீத பாடசாலை வருகை கட்டாயம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு முதல் இந்த விடயம் அமுல்படுத் தப்படும் என்று அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், 2022 ஆம் ஆண் டுக்காக க.பொ.த உயர்தரப் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு மட்டும் இதிலிருந்து சலுகை வழங் கப்படும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

## மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையாக இராஜாங்க அமைச்சர் டயானாவுக்கு உத்தரவு

கொழும்பு, நவ. 29

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரித்தானி யப் பிரஜாவுரிமையைப் பெற் றுள்ளதன் காரணமாக அவ ரது பாராளுமன்ற உறுப்பி னர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி சட்டத்த ரணி அசில் பாரிஸ் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை நேற்று விசார ணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி இந்த விடயம் தொடர் பில் நீதிமன்றில் விளக்க மளிக்குமாறும் இராஜாங்க அமைச்சர் டயானா கம கேவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அன்றைய தினம் பிரித்தா னிய குடியுரிமை தொடர்பான அனைத்து ஆவணங்களை யும் மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் டயானா கமகேக்கு உத்தரவிட்டுள்ளார். (அ)

## சமயதீட்சை பெற விரும்புவோர் பதிவு செய்துகொள்ள முடியும்!

யாழ்ப்பாணம், நவ. 29

ஆறுமுக நாவலர் ஆண் டாக 2022ஐ பிரகடனப் படுத்தியுள்ள நிலையில், சமய தீட்சை வழங்கும் நிகழ்வு குப்பிழான் சொக்க வளவு அங்கயற்கண்ணி மீனாட்சியம்மை உடனாய திருவாலவாய் சொக்கநாதப் பெருமான் ஆலயத்தில் எதிர் வரும் திங்கட்கிழமை காலை 8.00மணிக்கு நடைபெறவுள் ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப் பில் நித்திய பூசகர் இளம் சைவப்புலவர் ஜெயராசா அருள்தாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் தீட்சா குருவாக சிவசிறீ சிறீரங்கநாத குருக் கள் தீட்சை வழங்கவுள்ளார்.

ஆலயத்தில் சமயதீட்சை பெறவிரும்பும் சிவ அடிய வர்கள் தங்கள் பெயர்களைப் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன் னதாக 076 199 3367 கைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது. (ஐ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 29

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத்தப் படும் வாராந்த சிறப்பு சொற் பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடை பெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்க மைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சிவநெறிச்செம்மல் க. ஈஸ் வரன் "இந்துக்கள் வாழ்வில் கிரியைகளின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் ஆற்றுவார்.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்குக் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!"

- கௌதம புத்தர்

ஈழநாடு
Eelanadu
29.11.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணிலை நம்பலாமா?

ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை காணவுள்ளதாகக் கூறுகின்றார். இதனைத் தொடர்ந்து தமிழ் சூழலில் ஒரு கேள்வியை பரவலாக காணமுடிகின்றது - ரணில் விக்கிரமசிங்கவை எவ்வாறு நம்புவது? இந்தக் கேள்வி அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமல்ல, அரசியல் அவதானிகள் என்போரிடமும் உண்டு. பொதுவாக ரணிலை ஒரு நரியென்று கூறும் பார்வையொன்று தமிழ் சூழலில் நீண்டகாலமாக உண்டு. அன்ரன் பாலசிங்கம்கூட இதற்கு விதிவிலக்கல்லர். ரணிலின் கெட்டித்தனம் தொடர்பான அச்சத்திலிருந்தே இவ்வாறான பார்வை எழுகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் ரணிலை எவ்வாறு நம்புவதென்னும் கேள்வி எழுகின்றது?

தற்போதுள்ள தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிகரான அனுபவமுள்ளவர்கள் வேறு எவருமில்லை. ரணிலைப் பொறுத்தவரையில் தமிழரின் அரசியல் பிரச்னைகள் தொடர்பில் புதிதாகத் தெரிந்துகொள்வதற்கு எதுவுமில்லை. ஏனெனில், அவர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திலிருந்து ஒஸ்லோ பேச்சு வரையில் அனுபமுள்ளவர். இலங்கைத் தீவின் இனப்பிரச்னையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இரண்டு வரலாற்று நிகழ்வுகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில்தான் இடம்பெற்றன. இந்த இரண்டு சந்தர்ப்பங்களின் போதும், தென்னிலங்கை சிங்கள கடும்போக்குவாத தரப்புக்கள் குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தாலும்கூட, உலகத்தின் பார்வையில் தமிழர்களே அதிகமாகக் குற்றவாளிகளாக நோக்கப்பட்டனர். இந்திய தலையீட்டின் போது, விடுதலைப் புலிகள் இயக்கம் இந்திய இராணுவத்துக்கு எதிராக இரண்டு வருடங்கள் மோதலில் ஈடுபட்டது. இந்திய படைகளை வெளியேற்றுவதற்காக பிரேமதாஸவுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டது. இதன் விளைவாக, சிங்களவர்களை விடவும் தமிழர்கள் மீதே இந்தியாவின் கோபம் திரும்பியது. பிரேமதாஸவின் கபட தந்திரங்களைவிடவும் புதுடில்லி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதே கோபப்பட்டது. காரணம் விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்துடன் நேரடியாக மோதினர். ஆனால், பிரேமதாஸவோ ஒரு துரும்பைக்கூட இந்தியாவுக்கு எதிராக நேரடியாகப் பிரயோகிக்கவில்லை.

ஒஸ்லோ பேச்சின்போதும் சிங்கள ஆட்சியாளர்கள் பல தந்திரங்களைப் பிரயோகித்தனர். அமெரிக்காவில் இடம்பெற்ற உதவி வழங்கும் மகாநாட்டின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதனால், விடுதலைப் புலிகள் இயக்கம் அதிருப்தியடைந்தது. இந்த மகாநாடு அமெரிக்காவில் இடம்பெற்றால் இவ்வாறானதொரு நிலைமையேற்படும் என்பதைத் தெரிந்து கொண்டே கொழும்பு செயல்பட்டது. இதனைத் தவிர்த்திருக்கலாம். ஆனால், 2005 ஜனாதிபதி தேர்தலில் புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பால் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தார். இதனைத் தொடர்ந்து, ஒட்டுமொத்த மேற்குலகின் கோபமும் விடுதலைப் புலிகள் மீதே திரும்பியது. சிங்கள ஆட்சியாளர்களின் தவறுகளை அனைவரும் மறந்துவிட்டனர். இறுதியில் ஒட்டுமொத்த மேற்குலகமுமே விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திரும்பியது.

இந்த இரண்டு அனுபவங்களிலிருந்தும் நாம் எதை கற்றுக்கொள்ளப் போகின்றோம்? சிங்களவர்களை நம்பலாமா? வரலாற்று அனுபவங்களின்படி, நம்பமுடியுமா என்னும் கேள்வி நியாயமானதுதான், ஆனாலும் சிங்களவர்களுடன் பேச வேண்டுமென்பதே அரசியல் யதார்த்தமாகும். இந்தப் பின்புலத்தில் பேச்சுக்கு அழைப்பவர் எவ்வாறானவர் - அவரை நம்பலாமா என்னும் கேள்விகளுக்கு அப்பால், சூழ்நிலையை தந்திரோபாயமாக அணுகுவதும் அதனடிப்படையில் செயல்படுவதுமே இப்போதைய தேவையாகும்.

ரணில் தந்திரங்களை செய்தால், அதற்குள் அகப்படாமல் எவ்வாறு தமிழர் நலன்களிலிருந்து விடயங்களைக் கையாளுவதென்று சிந்திப்பதுதானே சரியானது. இதுவரையான அரசியல் அனுபவங்களின்படி சிங்களவர்கள் ஏமாற்றினார்கள் என்பதைவிடவும் தமிழர் தரப்புக்கள் ஏமாந்தன என்பதுதானே உண்மையானது. மற்றவர்கள் ஏமாற்றுகின்றார்கள் என்றால், நாங்கள் தொடர்ந்தும் ஏமாந்து கொண்டிருக்கின்றோம். சிங்களவர்களின் தந்திரங்களை முறியடிக்கும் வல்லமை எங்கள் பக்கத்தில் இருக்கவில்லை என்பதுதானே உண்மை. ஆளும் தரப்புகள் எப்போதும் அப்படித்தான் செயல்படும். அவர்கள் எப்போதுமே எதிர்தரப்புக்களை வீழ்த்தும் தந்திரங்களில்தான் கவனம் செலுத்துவர். அது ஆளும் தரப்புகளின் பண்பு. பொறிக்குள் அகப்படவும்கூடாது, அதேவேளை எங்களுடைய நலன்களையும் பாதுகாக்க வேண்டும். இதற்குத்தான், ஒரு மக்கள் கூட்டத்துக்கு தலைமை ஒன்று தேவைப்படுகின்றது. எனவே, ரணில் பற்றிய கதைகளை விடுத்து, அவருடன் பேசி அவரின் பொறிக்குள் அகப்படாமல் நலன்களை வெற்றிகொள்வது பற்றியே தமிழ் தேசிய கட்சிகள் சிந்திக்க வேண்டும்.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளியை பார்க்க சென்றவரை தாக்கிய பாதுகாப்பு ஊழியர்!

*யாழ்ப்பாணம், நவ. 29*

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளி ஒருவரை பார்க்கச் சென்ற ஒருவர் மீது வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குழுவாக இணைந்து தாக்குதல் நடத்தினர் என தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பாக முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 26 ஆம் திகதி மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமது தாயாரைப் பார்ப்பதற்காக இருவர் வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர்.

இதன்போது ஒருவர் மட்டுமே வைத்தியசாலை விடுதிக்குள் சென்று நோயாளரை பார்வையிட முடியும் என பாதுகாப்பு உத்தியோகத்தரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏன் பாரபட்சமாக நடக்கிறீர்கள் - வேறு நோயாளியை பார்ப்பதற்கு ஒரே நேரத்தில் சில பார்வையாளர்களை அனுமதித்தீர்களே என தெரிவித்து நோயாளியை பார்க்கச் சென்றவர் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது இரு தரப்புக்கும் வாக்குவாதம் ஏற்படவே ஒன்றுகூடிய வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் மீதும் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த தபாலக ஊழியர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்றார்.

இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

## ஈழத்து சிதம்பரம் பாலஸ்தாபனம் தடை கட்டளை விதித்தது நீதிமன்றம்!

*யாழ்ப்பாணம், நவ. 29*

காரைநகர் ஈழத்து சிதம்பரம் ஆலயத்தின் பாலஸ்தாபனத்தை எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி செய்வதற்கு தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளதாக சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவித்தார்

காரைநகர் ஈழத்து சிதம்பரம் என சிறப்பாக அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவிலில் திருவம்பாவை உற்சவத்தை குழப்பும் விதமாக ஆலயத்தின் தர்மகத்தாக்களில் ஒருவர் எதிர்வரும் 4ஆம் திகதி பாலஸ்தாபனத்தை செய்யப்போவதாக அறிவித்திருந்தார். இதையடுத்து அங்கு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது.

திருவெம்பாவை உபயகாரர்களும் ஆலய பக்தர்களும் திருவம்பாவை உற்சவம் நடைபெறாமல் பாலஸ்தாபனம் செய்வது தமது ஊருக்கு உகந்ததல்ல என்ற கருத்துகளை வெளியிட்டதையடுத்து குழப்பநிலை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து குறித்த பாலஸ்தாபன நிகழ்வை எதிர்வரும் 4ஆம் திகதி செய்யக்கூடாது எனத் தடை உத்தரவு கோரி திருவெம்பாவை உபயகாரர்கள் ஐவர் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடுத்தனர்.

வழக்கு விசாரணையில் 4ஆம் திகதி நடத்தப்படவிருந்த பாலஸ்தாபன நிகழ்வுக்கு தடை விதிப்பதாக நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது. இந்த வழக்கானது சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்றது இந்த வழக்கிலே வழக்காளிகளான உபயகாரர்கள் சார்பில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தேன்.

நீதிமன்றத்திலே வழங்கப்பட்ட கட்டளை தொடர்பில் எதிராளிகளுக்கு கட்டளை அனுப்பப்படவுள்ளது. அத்துடன், வழக்கு எதிர்வரும் டிசெரம்பர் 12ஆம் திகதிக்கு மறுதவணையிடப்பட்டுள்ளது.

(ஐ-03)

## மது போதையில் விபத்தை ஏற்படுத்திய பொலிஸார் கைது!

*யாழ்ப்பாணம், நவ. 29*

மது போதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணம் முலவை சந்திப் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மதுபோதையில் பயணித்தவர்கள் வான் ஒன்றை இடித்துவிட்டு, தாங்கள் பொலிஸ் என்று கூறிவிட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முனைந்தனர். எனினும், அங்கு கூடிய மக்கள் அவர் களை மடக்கிப் பிடித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பியவர்களில் ஒருவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும் மற்றையவர் ஐயன்குளம் பொலிஸ் நிலையத்திலும் பணியாற்றுபவர்கள் என்று தெரிய வருகின்றது.

(ஐ-03)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# இலங்கைத் தமிழர்களின் விடுதலையும் இந்திய பாதுகாப்பும் ஒற்றை புள்ளியில்!

## உலக தமிழர் பேரமைப்பின் பழ. நெடுமாறன்

தஞ்சாவூர், நவ. 29

இலங்கைத் தமிழர்களின் விடுதலையும் இந்தியாவின் பாதுகாப்பும் ஒற்றை புள்ளியில் அமைந்துள்ளன என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் மற்றும் நினைவு முற்றத்தின் 10ஆம் ஆண்டு தொடக்க விழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. முன்னாள் மத்திய நிதித் துறை இணையமைச்சர் செஞ்சி ந.ராமச்சந்திரன் சிறப்புரையாற்றினார்.

இதன்போது, விடுதலைக்குப் போராடிய நாடுகள் தோற்றது இல்லை. ஐ. நாவில் தமிழீழமும் இடம்பெறும். இலங்கையில் கடற்படைதளம், சாலை, ரயில் வசதிகளை சீனா ஏற்படுத்தியுள்ளது. இலங்கை மக்கள்மீதான அக்கறையால் சீனா இதைச் செய்யவில்லை. இந்தியாவை அச்சுறுத்தத்தான். இலங்கைத் தமிழர்களின் விடுதலையும் இந்தியாவின் பாதுகாப்பும் ஒற்றைப் புள்ளியில் உள்ளன என்பதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# பா.ஜ.க., ஆர். எஸ். எஸ்ஸில்தான் பயங்கரவாதிகள் இருக்கின்றனர்

## நாம் தமிழர் சீமான்

சேலம், நவ. 29

“ஆர். எஸ். எஸ்., பா. ஜ. கவில்தான் மொத்த பயங்கரவாதிகளும் உள்ளனர்” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், “ஒன்லைன் சூதாட்டத்தால் எத்தனை உயிர்களை இழந்துள்ளோம் என்று பாருங்கள். அதை தடை செய்யுங்கள் என்று சொன்னால், அதை செய்யாமல், அதற்கு கையெழுத்திடுவதில் என்ன பிரச்னை இருக்கிறது. அப்போது மக்கள் நலனில் அக்கறை இல்லையா ஆளுநருக்கு? மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஓர் ஆட்சி முடிவெடுக்கிறது. மக்கள் நலன் சார்ந்து ஓர் அரசு முடிவெடுக்கிறது என்றால், மக்களால் தேர்வு செய்யப்படாத ஆளுநர் அதற்கு கையெழுத்திடாமல், தடுப்பது என்ன ஒரு கொடுமை என்று பாருங்கள். அப்போது 8 கோடி மக்களுக்கு என்ன மதிப்பு இருக்கிறது. இதில் எங்கு மக்களாட்சி இருக்கிறது, எங்கே ஜனநாயகம் இருக்கிறது?”

அவரிடம், வாக்குவங்கிக்காக காங்கிரஸ் கட்சி பயங்கரவாதிகளை ஆதரிப்பதாக குஜராத்தில் மோடி பேசியிருப்பது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, “பா. ஜ. கவை காங்கிரஸ் ஒன்றும் ஆதரிக்கவில்லையே. ஆர். எஸ். எஸ்., பா. ஜ. கவில்தான் மொத்த பயங்கரவாதிகளும் உள்ளனர். அவர்களை காங்கிரஸ் ஆதரித்ததாகத் தெரியவில்லையே” என்றார். (ஐ)

# இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ் மண்ணிலிருந்து எழுதப்படட்டும்!

## முதல்வர் ஸ்டாலின்

திருநெல்வேலி, நவ. 29

‘இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ் மண்ணிலிருந்து எழுதப்படட்டும்’ என்று பாளையங்கோட்டையில் பொருநை இலக்கியத் திருவிழாவை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழியின் இலக்கிய மரபுகளைக் கொண்டாடும் வகையில் பொருநை (தாமிரபரணி), வைகை, காவிரி, சிறுவாணி, சென்னை என ஐந்து மண்டலங்களில் இலக்கியத் திருவிழாக்கள் நடத்தப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இதன்படி, நடத்தப்பட்ட பொருநை இலக்கிய திருவிழாவில் பேசிய அவர்,

தமிழ் சமூகமானது இலக்கிய முதிர்ச்சியும் பண்பாட்டின் உச்சத்தையும் அடைந்த பெருமைக்குரியது. கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை என பல அகழாய்வுகள் வழியாக அறிவியல் பூர்வமாக நிறுவப்பட்டுள்ள நமது தொன்மை - நமது பெருமை.

இந்தபெருமையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சென்று, அறிவுசார் சமூகத்தை வார்த்தெடுக்கும் இலக்குடன் 5 இடங்களில் இலக்கியத் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. இதன் முதல் நிகழ்வாக அன்னை மடியான பொருநை ஆற்றங்கரையில் நடைபெறும் இலக்கியத் திருவிழா சிறந்ததொரு முயற்சி. இந்திய துணை கண்டத்தின் வரலாறு தமிழ் மண்ணிலிருந்து எழுதப்படட்டும் - என்றார். (ஐ)

# தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பு 80வீதம் தமிழருக்கே வழங்குக!

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

சென்னை, நவ. 29

“தமிழ்நாட்டின் வேலை வாய்ப்புகள் தமிழர்களுக்கே கிடைக்க வேண்டும். அதற்காக, தமிழ்நாட்டில் தனியார் நிறுவனங்களில் தமிழர்களுக்கு 80 வீத வேலைவாய்ப்பு வழங்க வகை செய்யும் சட்டத்தை வரும் ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைக் கூட்டத்தில் அரசு நிறைவேற்ற வேண்டும்” என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், “தமிழ்நாட்டில் தனியார் நிறுவனங்களில் தமிழர்களுக்கு வேலை கிடைப்பதை உறுதி செய்வதற்கான அதிகாரம் தமிழக அரசிடம் உள்ளது. இதை தமிழக அரசே செய்ய முடியும் என்ற நிலையில், தனியார் நிறுவனங்கள் அளிக்கும் உத்தரவாதமற்ற உறுதிமொழிகளை நம்பிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தமிழ்நாட்டின் வேலைவாய்ப்புகள் தமிழர்களுக்கே கிடைக்க வேண்டும் - என்றார். (ஐ)

| | |
|---|---|
| நவம்பர் - 29 | செவ்வாய்க்கிழமை |
| சுபகிருது வருடம் - | கார்த்திகை 13 |
| நல்ல நேரம் : | 07.30 - 09.00 |
| ராகு காலம் : | 03.00 - 04.30 |
| திதி : | சஷ்டி |




**மேடம்**
முயற்சி வெற்றியாகும்.மேலதிகாரியுடன் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். புதிய முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி காண்பீர்கள். வருவாயில் இருந்த தடைகள் விலகும்.

**இடபம்**
இரண்டு நாளாக இருந்த நெருக்கடி விலகும். உங்கள் முயற்சி இன்று எளிதாக நிறைவேறும்.திட்டமிட்டு செயல்படுவீர்கள். நினைத்ததை இன்று அடைவீர்கள். தடைகளைத் தாண்டி முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

**மிதுனம்**
மனதில் இனம்புரியாத குழப்பம் உண்டாகும்.நிதானித்து செயல்படுங்கள். எந்தவொரு செயலிலும் அவசரம் வேண்டாம்.முயற்சியில் வெற்றியைக் காண முடியாமல் போகும். எதிர்பார்ப்புகளும் இழுபறியாகும்.

**கடகம்**
வருமானம் கூடும்.உறவுகளிடம் ஏற்பட்ட பிரச்னைகள் சரியாகும். நீங்கள் நினைத்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள்.வாழ்க்கைத் துணையின் வழிகாட்டுதலால் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும்.

**சிம்மம்**
பகைவர்கள் விலகிச் செல்வார்கள். உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் விலகும். உற்சாகத்துடன் செயல்பட்டு லாபம் காண்பீர்கள். செயலில் உண்டான தடைகள் விலகும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள்.

**கன்னி**
முயற்சியில் தடைகளை சந்தித்தாலும் போராடி வெல்வீர்கள். எதிர்பார்த்த வரவு உண்டு.விலகிச்சென்ற உறவுகள் தேடி வருவார்கள். உங்கள் கையை விட்டுப் போன ஒப்பந்தம் மீண்டும் உங்களிடம் வந்து சேரும்.

**துலாம்**
எதிர்பாலினர் விஷயத்தில் எச்சரிக்கை வேண்டும். உங்களது வேலையில் மட்டும் கவனம் செலுத்துங்கள். நீங்கள் நினைப்பதை நிறைவேற்றிக் கொள்ள கடுமையாக முயற்சிப்பீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் செல்வாக்கு உயரும். குடும்பத்தில் சுபச்செலவு அதிகரிக்கும். சிலர் நகை, வாகனம் என்று வாங்கி மகிழ்வீர்கள். உங்கள் தனித்திறமை வெளிப்படும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும்.

**தனுசு**
எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். குழப்பங்கள் விலகும். மற்றவர்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்சிந்தித்து செயல்பட்டு சிரமங்களில் இருந்து விடுபடுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்**
மனதில் குழப்பம் உண்டாகும். உங்களது எதிர்பார்ப்புகள் தள்ளிப் போகும் என்பதால் செயல்களில் குழப்பம் உண்டாகும். உறவினர்களால் இன்று சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள். பேச்சில் கவனம் தேவை.

**கும்பம்**
எதிர்பாராத செலவு உண்டு. பொன் பொருட்களை விற்று புதிய முயற்சியை மேற்கொள்வீர்கள். செலவில் கவனம் தேவை. எதிர்பார்த்த வரவுகள் இழுபறியாகும். குடும்பத்தினரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

**மீனம்**
புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். அரசு வழியிலான எதிர்பார்ப்பு ஆதாயமாகும்.உங்கள் செல்வாக்கு உயரும். திட்டமிட்டு செயல்பட்டு மேலதிகாரியின் பாராட்டிற்கு ஆளாவீர்கள்.

# பஸில் ராஜபக்ஷ மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்

## கூறுகின்றது ஆளும்கட்சி

கொழும்பு, நவ. 29

பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என ஆளும்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியபோது விமான நிலையத்தில் இடம்பெற்ற விடயங்கள் குறித்து பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாக ஆளும்கட்சி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனினும் பஸில் ராஜபக்ஷவும் அவரது மனைவியும் நாடு திரும்பியதும் விமான நிலையத்தில் உள்ள வி.ஐ.பி. வாயிலை பயன்படுத்த 400 டொலர்களை செலுத்தியுள்ளனர்.

மேலும் அவரை விமான நிலையத்தில் வரவேற்க கணிசமான மக்கள் வந்திருந்த நிலையில், அவர்களில் சிலர் அனுமதியுடன் பிரமுகர் முனையத்துக்கு சென்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின், அவர்களுக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது என்றும் இது தொடர்பான கட்டணங்கள் பஸில் ராஜபக்ஷவினால் செலுத்தப்பட்டதாகவும் பொதுஜன பெரமுன கூறியுள்ளது. (அ)

# விவசாயிகள், மீனவர்களுக்கு இலவச டீசல் வழங்கும் சீனா

கொழும்பு, நவ. 29

சீனாவினால் வழங்கப்படும் 10.6 மில்லியன் லீற்றர் டீசல் இலவசமாக வழங்கப்படும் என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

2022/2023 பெரும்போகத்தில் இலங்கை முழுவதும் 342,266 ஹெக்ரேயர் நெல் வயல்களை அறுவடை செய்வதற்காக 232,749 விவசாயிகளுக்கு எரிபொருள் இலவசமாக வழங்கப்படும்.

மேலும், இலங்கையில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் 3,796 மீன்பிடிக் கப்பல்களுக்கும் சீனாவினால் இலவசமாக டீசல் வழங்கப்படும் என சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# உணவு பணவீக்க பட்டியலில் முன்னேற்றம் கண்ட இலங்கை

கொழும்பு, நவ. 29

உலகளாவிய ரீதியில் உணவுப் பணவீக்கம் அதிகமாக உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக உலக வங்கியின் அண்மைய மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் உணவுப் பணவீக்கம் 86 சதவீதமாக உள்ளதுடன், கடந்த ஒகஸ்ட் மாதம் வெளியான அறிக்கையில் இலங்கை 5ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

321 சதவீத உணவுப் பணவீக்கத்துடன் சிம்பாப்வே முதலாம் இடத்திலும் முறையே 208 மற்றும் 158 சதவீத பணவீக்கத்துடன் லெபனான் மற்றும் வெனிசுவெலா ஆகிய நாடுகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களிலும் உள்ளன.

99 சதவீத பணவீக்கத்தைக் கொண்டுள்ள துருக்கி ஐந்தாம் இடத்திலும் 87 சதவீத பணவீக்கத்தை கொண்டுள்ள ஆர்ஜென்ரீனா ஆறாம் இடத்திலும் உள்ளதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

7ஆம் 8ஆம் 9ஆம் 10ஆம் இடங்களை முறையே ஈரான், ருவாண்டா, சுரினாம், லாவோஸ் ஆகியவை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படும் இலங்கையின் முதன்மை பணவீக்கம் 70.6 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம், அண்மையில் அறிவித்தது.

செப்ரெம்பர் மாதத்தில் 73.7 சதவீதமாக உயர்ந்து காணப்பட்ட பணவீக்கம் ஒக்ரோபர் மாதத்தில் 70.6 சதவீதமாக குறைந்துள்ளதாக திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# நாட்டில் அராஜக நிலைமையை தோற்றுவிக்க மேற்குலகம் சதி!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 29

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தமது பொறிக்குள் இலங்கையை சிக்க வைப்பதற்கு இந்தியாவும், மேற்குலகமும் முயற்சிக்கின்றன-என்று 'உத்தர லங்கா சபாகய'வின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

'உத்தர லங்கா சபாகய'வின் நுவரெலியா மாவட்ட மக்கள் சந்திப்பு ஹங்குராங்கெத்தையில் நேற்று முன் தினம் நடைபெற்றது. நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸவால் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய விமல் வீரவன்ஸ கூறியவை வருமாறு-

இலங்கை பொருளாதார ரீதியில் பலமிழந்துள்ளது. இதனை வைத்து பலம்பொருந்திய நாடுகள் இலங்கையின் கழுத்தை இறுக்கிப் பிடிக்க முற்படுகின்றன. தமது உபாயத்துக்குள் இலங்கையை கொண்டுவருவதற்கு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றன. தமது நாட்டு ரூபாவை இலங்கையில் செயற்படுத்துவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. அவ்வாறு நடந்தால் இலங்கை இந்தியாவின் மாநிலமாக மாறக்கூடிய சூழ்நிலைமை தானாகவே உருவாகிவிடும்.

மறுபுறத்தில் நாட்டில் போராட்டங்களை தூண்டிவிட்டு, அராஜக நிலைமையொன்றை உருவாக்குவதற்கு மேற்குலக நாடுகள் திட்டம் தீட்டுகின்றன. ஹெய்ட்டி போன்று இலங்கையிலும் ஆட்சி கட்டமைப்பு இல்லாத நிலைமையை தோற்றுவித்து, நாட்டை சீரழிக்க முற்படுகின்றன. இதற்காக 'என்.ஜீ.ஓ' காரர்கள் தூண்டிவிடப்படுகின்றனர். ஆசிரியர்களுக்கான ஆடையில் மாற்றம் வேண்டும் எனக் கூறுவது இந்த நிகழ்ச்சி நிரலின் ஓர் அங்கமாகும்-என்றார். (அ)

# சரியான ஒழுங்குபடுத்தல் இல்லாமல் கசினோ உரிமம் வழங்கப்படக்கூடாது

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து

கொழும்பு, நவ. 29

இலங்கைக்குள் சூதாட்ட விடுதிகளை நடத்துவதற்கு உரிமம் வழங்கப்படவேண்டுமானால், உடனடியாக சூதாட்ட ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நிறுவப்படவேண்டும் என கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று திங்கட்கிழமை உரையாற்றிய அவர், உலகின் எந்த நாட்டிலும் கசினோ ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இல்லாமல் கசினோ உரிமங்கள் வழங்கப்படுவதில்லை.

மேலும், சம்பந்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு எப்போது கொண்டு வரப்படும் என்பது குறித்து குறைந்தபட்சம் தோராயமாக கோப் குழுவிற்கு தெரியப்படுத்துவது அவசியம்-என்றார்.

இதற்கிடையில், நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் பயனுள்ளதாக மாற்றியதன் பின்னர் அனுமதியை பரிசீலிப்பதே சிறந்தது என கோப் குழுவின் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்படும் வரியைத் தவிர, சூதாட்ட விடுதியை நடத்துவதற்கு எவ்வித ஏற்பாடும் இல்லை எனவும், ஆரம்பகட்ட நடவடிக்கையாக இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர். (அ)

# மொபைல் போன் மற்றும் டேட்டா கட்டணங்களை குறைக்கவேண்டும்

## சபையில் எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்பு, நவ. 29

பொதுமக்கள் செலுத்தும் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இணைய சேவைக்கான கட்டணங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று காலை வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

அண்மைக்காலமாக கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இணைய சேவைக்கான கட்டண விலையேற்றம் ஏற்படுத்திய தாக்கம் குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இவ்விடயத்தில் ஓரளவு என்றாலும் நிவாரணம் வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்றும் கயந்த கருணாதிலக்க கேட்டுக்கொண்டார். (அ)

# இலங்கையின் எரிசக்தி துறையில் ஐக்கிய அரபு இராச்சியம் முதலீடு



கொழும்பு, நவ. 29

இலங்கையின் எரிசக்தித் துறையில் முதலீடு செய்வதற்கு பெரும் வாய்ப்புகள் இருப்பதாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் காலித் நாசர் அல்அமெரி தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் இதனை தெரிவித்த அவர், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் புதிய முதலீடுகள் குறித்தும் பேசினார்.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களில் முதலீடு செய்வதில் தமது அரசாங்கம் ஆர்வமாக உள்ளதாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் குறிப்பிட்டார்.

எரிசக்தி துறைக்கு மேலதிகமாக விவசாயம் மற்றும் கைத்தொழில் போன்ற துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் பிரதமர் வலியுறுத்தினார்.

அத்துடன், தற்போதைய பொருளாதாரப் பிரச்னைகளில் இருந்து விரைவாக மீள்வதற்கு உதவிய ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு அரசாங்கம் சார்பாக பிரதமர் நன்றி தெரிவித்தார். (அ)

# 96,000 பொலிஸாருக்கு தொற்றா நோய் பாதிப்பு

கொழும்பு, நவ. 29

சுமார் 96 ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் தொற்றாத நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மருத்துவ சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஷமேந்திர ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் நீரிழிவு தொடர்பான சிக்கல்களைக் கண்டறியும் விசேட செயற்திட்டம் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இதனடிப்படையில், நாடளாவிய ரீதியில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் கண் நோய்கள் தொடர்பான பரிசோதனைகளும் நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் தமிழருக்கு கொடுக்கக்கூடாது!

## சரத் வீரசேகர விடாப்பிடி நிலை

கொழும்பு, நவ. 29

**பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு நாட்டை பிளவுபடுத்த இடமளிக்க மாட்டோம் என பொதுஜன பெரமுன் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த 29 ஆயிரம் வீரர்களின் தியாகத்தை மலினப்படுத்த போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து கருத்து வெளியிட்ட அவர், அதிகாரப் பகிர்வு என்பது சாத்தியமற்றது.

அரசியல் மற்றும் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு தமிழ் அரசியல் தலைமைகள் தங்களை வளப்படுத்திக் கொள்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டபோதும் அந்த உரிமைகளை தமிழ் தலைமைகள் பாதுகாத்துக் கொள்ளவில்லை.

மேலும் வடக்கு-கிழக்கிற்கு அதிகாரங்களை விஷ்தரித்தாலும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே காணப்பட வேண்டும்-என்றார். (அ)

# 81 பறவை இனங்கள் அழியும் அபாயத்தில்!

கொழும்பு, நவ. 29

நாட்டில் 81 பறவை இனங்கள் அழியும் அபாயத்தில் உள்ளதாக உயிர் பல்வகைமை செயலகம் தெரிவித்துள்ளது.

2021 சிவப்பு தரவு புத்தகம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது, இந்த தகவல் வெளியாகியுள்ளதாக செயலகத்தின் பணிப்பாளர் பத்மா அபேக்கோன் தெரிவித்துள்ளார்.

244 வகையான பறவைகள் ஆய்வு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த பறவை இனங்களை பாதுகாப்பதில் முழு சமூகமும் பொறுப்பேற்கவேண்டும் என பத்மா அபேக்கோன் மேலும் கூறினார். (அ)

# ஈஸ்டர் குண்டு வெடிப்பு சந்தேகநபர் படுகொலை

கொழும்பு, நவ. 29

கொழும்பு மாநகரின் புறநகர்பகுதியான மட்டக்குளியில் ஈஸ்டர் குண்டு வெடிப்புடன் தொடர்பாக கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட சந்தேக நபர் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

மட்டக்குளியில் உள்ள ஹோட்டல் முன்பாக நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் இந்த சந்தேக நபர் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளியில் உள்ள சாவிய பதும பகுதியைச் சேர்ந்த மொஹமட் பதுர்தீன் மொஹமட் பர்ஹான் (வயது 38) என்பவரையே வாகனத்தில் வந்த சிலர் கூரிய ஆயுதங்களால் தாக்கி கொலை செய்துள்ளனர்.

கொல்லப்பட்ட நபர் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை மட்டக்குளி பொலிஸார் நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பழைமைவாய்ந்த புத்தர் சிலை ஆபரணங்களுடன் ஐவர் கைது



கொழும்பு, நவ. 29

மாத்தளை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது தங்க முலாம் பூசப்பட்ட சிறிய புத்தர் உருவச்சிலை ஒன்றுடன் ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் உக்குவளை உள்பதபிட்டிய ரைத்தலாவெல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸாரின் சுற்றி வளைப்பின் போது 11 மில்லி மீற்றர் உயரம் கொண்ட மிகவும் பழைமை வாய்ந்த புத்தர் உருவச்சிலை மற்றும் பித்தளை ஆபரணம் பெட்டியொன்றும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டது.

கட்டுகஸ்தோட்டை, ரைத்தலாவெல, மஹவெல, அரநாயக்க ஆகிய பிரதேசங்களை சேர்ந்த சந்தேக நபர்கள் ஐவரும் மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை இவர்களை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ)

# ரயிலில் செல்லும் பிரதமரின் மகன்!

கொழும்பு, நவ. 29

நேரம் கிடைக்கும்போது தானும் ரயிலில் செல்வதாக பிரதமர் தினேஷ் குணவர்தனவின் மகனும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான யதாமினி குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தான் மருதானையிலிருந்து ரயிலில் செல்வதாகத் தெரிவித்த அவர், தற்போது அந்தத் தூரத்தை பயணிக்க 120 ரூபா அறவிடப்படுவதாக கூறினார்.

165 ஆண்டுகள் பழமையான ரயில்வே துறையை தவறான பாதையில் கொண்டு செல்லாமல் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றும், பொது போக்குவரத்தை கவர்ச்சிகரமானதாக மாற்ற வேண்டும் என்றும் ரயில்வே திணைக்களத்தில் உள்ள திறமையான பலர் கூறுவதாகவும் யதாமினி குணவர்தன சுட்டிக்காட்டினார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே யதாமினி குணவர்தன இதனைக் குறிப்பிட்டார். (அ)

# அராலியில் கடல் அட்டை பண்ணை அமைப்பதற்கு மீனவர்கள் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், நவ. 29

அராலி பகுதி கடலில் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு அங்கிருக்கும் மீனவர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில்- நாங்கள் கடற்றொழிலினையே வாழ்வாதாரமாக கொண்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். பொருளாதார நெருக்கடியால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எமது கடலில் அட்டைப் பண்ணை அமைப்பது என்பது “பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதிப்பது” போலாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இங்கே வருகை தந்த சிலர் எமது கடலில் அட்டைப் பண்ணை அமைப்பதற்கு பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள். மேலும் இவ்வாறு அட்டைப் பண்ணை அமைக்கும் முயற்சியை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு இவ்வாறான செயற்பாட்டுக்கு இடமளிக்கவும் மாட்டோம்

இதேவேளை, எரிபொருள் பிரச்னை எமக்கு பாரியதொரு பிரச்சினையாக காணப்படுகின்ற நிலையில் இவ்வாறான அட்டைப் பண்ணைகள் எமக்கு புதிய ஒரு தலையிடியாக மாறியுள்ளது.

எனவே மீனவர்களது நிலையை கருத்தில் கொண்டு மிக விரைவில் இதற்கு ஒரு தீர்வினை வழங்கவேண்டும்-என்றனர். (அ)

# மாணவருக்கு போதைப்பொருள் மாத்திரை விற்பனை செய்தவர் வவுனியாவில் கைது!

வவுனியா, நவ. 29

வவுனியாவில் பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருட்களை விநியோகித்த குற்றச்சாட்டில் 33 வயதுடைய நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 539 போதைப் பொருள் மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நபர் நீண்டகாலமாக சட்டவிரோத போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபட்டுவந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.பூவரசங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இனப்பிரச்னை தீர்வுக்கு 13 பிளஸ் கட்டாயமானது!

## வலியுறுத்துகிறார் டிலான் பெரேரா



கொழும்பு, நவ. 29

நாட்டின் தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வாக 13 பிளஸ் முறைக்கு கட்டாயம் செல்லவேண்டும். அவ்வாறு 13 பிளஸ் திட்டத்துக்கு செல்லும்போது ஒற்றையாட்சி அல்லது ஐக்கிய இலங்கை என்ற வசனங்களில் தொங்கிக் கொண்டிருக்கக்கூடாது. மாறாக எவ்வாறான அதிகாரப்பகிர்வு எமக்குக் கிடைக்கிறது என்பதையே இங்கு பார்க்கவேண்டும் என்று பொது ஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சுயாதீனமாக செயற்படும் சுதந்திர மக்கள் காங்கிரஸின் பிரதிநிதி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்துவதற்கு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இது தொடர்பில் வினவிய போதே பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனப்பிரச்னைக்கு தீர்வாக 13 பிளஸ் திட்டத்தின் ஊடாக தீர்வு காண்பதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் தற்போது கிடைத்திருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றார்.

எனவே இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால் இந்த நோக்கம் உண்மையானதாக இருக்கவேண்டும்.

இது வரவு-செலவுத் திட்டத்திற்கு வாக்குகளை பெறுக் கொள்வதற்கான ஒரு அணுகுமுறையாக அமையக்கூடாது.

தற்போது தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்துவதற்கு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். இது ஒரு சிறந்தவொரு யோசனையாக காணப்படுகிறது.

ஆனால் இது உண்மையில் நேர்மையானதாக இருக்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு-செலவுத் திட்டத்திற்கு கூட்டமைப்பின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக இப்படி ஒரு அணுகு முறையை முன்னெடுக்கக் கூடாது.

மாறாக உண்மையிலேயே பிரச்னையை தீர்ப்பதற்கான முயற்சி இதனூடாக இடம் பெறவேண்டும். ஆனால் எப்படியோ இந்த இடத்தில் 13 பிளஸ் திட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த இணக்கம் தெரிவித்தார்.

அப்படியானால் தற்போது 13 பிளஸ் ஊடாக இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே 13 பிளஸ் என்ற அடிப்படையில் அதிகாரப் பகிர்வை நோக்கிச் செல்லும் போது ஒற்றையாட்சி ஐக்கிய இலங்கை என்று வசனங்களில் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது. அதே போன்று ஐக்கியம் என்ற வசனத்தில் வடக்கு-கிழக்கு தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது.

மாறாக எவ்வாறான ஒரு அதிகாரப் பகிர்வு எமக்குக் கிடைக்கிறது என்பது தொடர்பாகவே இங்கு சென்று பார்க்க வேண்டும்.

ஆனால் ஒற்றையாட்சி என்ற தொங்கினால் 13 பிளஸ் என்ற திட்டத்திற்கு செல்ல முடியாது. எனவே இங்கு ஏதோ ஒரு முறையிலான ஒரு அணுகுமுறைக்கு அல்லது ஒரு திட்டத்துக்கு அனைவரும் செல்ல வேண்டும்.

13 பிளஸ் எனும்போது அதில் ஒரு புதிய விடயம் இணையவேண்டும். அந்த புதிய விடயமாக செனட் சபையை இணைத்துக்கொள்ள முடியும் என நான் கருதுகிறேன்.

அதாவது தற்போது இருக்கின்ற பாராளுமன்றத்துக்கு மேலதிகமாக மேலும் ஒரு சபையை உருவாக்கி அதில் மாகாண சபைகளின் உறுப்பினர்களை கொண்ட பிரதிநிதிகள் அங்கத்துவம் பெற முடியும்.

இதனூடாக மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியும். மக்களின் உரிமைகளை பாதுகாக்க முடியும்.

எனவே 13ஆவது திருத்தத்தின் ஊடாக செனட் சபையையும் இணைத்துக்கொள்ள முடியும் என்பதே எனது நிலைப்பாடு அமைந்திருக்கின்றது-என்றார். (அ)

# வெளிவிவகார அமைச்சில் பணியாளர் பற்றாக்குறை!

கொழும்பு, நவ. 29

வெளிவிவகார அமைச்சு தற்போது கடுமையான நிதி மற்றும் பணியாளர் பற்றாக் குறையை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளில் 84 நபர்கள் மாத்திரமே இராஜதந்திர சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர் என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய நேற்று தெரிவித்தார்.

177 இராஜதந்திர அதிகாரிகள் மாத்திரமே இருப்பதாகவும், உண்மையான இராஜதந்திரப் பணியாளர்கள் பலம் 264 ஆகும் என்றும் அவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

வெளிவிவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தின் போது பேசிய அவர், அடுத்த ஆண்டு ஜூலை மாதத்திற்குள் சுமார் 40 அதிகாரிகளை பணியமர்த்த அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த சில வருடங்களாக அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவதால், டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டியுள்ளதனால், வெளிவிவகார அமைச்சு கடுமையான நிதிப் பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"2018 இல் வெளிவிவகார அமைச்சுக்கு 56 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு இதுவரை 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிட்டுள்ளோம். 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 24 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# மீனவர்களுக்கு ஓய்வூதிய திட்டம்

கொழும்பு, நவ. 29

மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் மூலம் மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்தார். (அ)

# ஏப்ரல் மாதம் முதல் அரச நிவாரணங்கள்

அரச நிவாரணத் திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 34 இலட்சம் விண்ணப்பங்கள் தொடர்பில் உன்னிப்பாக ஆராய்ந்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த விண்ணப்பதாரர்களில் தகுதியானர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான நிவாரணத் திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தற்போது வழங்கப்பட்டு வரும் அரச நிவாரணங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை தொடர்ந்தும் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# அரச நிறுவன நிகழ்வுகளுக்கான செலவுகள் உடனடியாக இரத்து!

கொழும்பு, நவ. 29

அரச நிறுவனங்களில் முன்னெடுக்கப்படும் பல்வேறு நிகழ்வுகளுக்கான செலவுகளை இரத்து செய்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரத் தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

நாட்டில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட நிதி கட்டமைப்பிற்குள், அரச நிறுவனங்களின் துறைசார் நிகழ்வுகள் மற்றும் வெளி நிகழ்வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை இடைநிறுத்த கடந்த ஜூன் மாதம் 13ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்தது.

அதற்கமைய, அமைச்சுகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள், அரச தொழில்முயற்சியாண்மை, மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச வங்கிகள், கடமைகளை பொறுப்பேற்றல் மற்றும் ஓய்வூ பெறுவதுடன் தொடர்புடைய நிகழ்வுகள், சினேகபூர்வ சந்திப்புகள், கொண்டாட்டங்கள் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளுக்கும் அரச நிறுவனங்களூடாக ஈட்டப்படும் நிதியை செலவிடுகின்றமை நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மனநோய் ஏற்படுத்தும் ஐஸ் போதைப்பொருள்

## வைத்திய நிபுணர் வெளியிட்ட அதிர்ச்சி தகவல்

கொழும்பு, நவ. 29

ஐஸ் போதைப்பொருள் பயன்பாட்டினால் மனநோய் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளதாக மனநோய் சிறப்பு மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களையும் இளைஞர் சமூகத்தையும் ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையாக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின்போதே மனநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய சமூகத்தில் மனநோய்க்கும் ஐஸ் என்ற போதைபொருள் தெளிவான தொடர்பு இருக்கிறது. கேட்டால் ஐஸ் எடுத்தவர் என்கிறார்கள். இறுதியில் இவர்களுக்கு ஐஸ் போதைபொருளால் பல்வேறு மனநோய்களுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களை குறிப்பாக இளம் தலைமுறையினரை இந்த ஐஸ் போதை பொருள் அழிக்கும் வகையில் காணப்படுகின்றது.

இது இன்று இலங்கையில் இது ஒரு பெரிய பிரச்னையாக மாறியுள்ளது. இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மீது பெற்றோரின் கவனக்குறைவு சிறுவர்களை போதைப் பொருள் பாவனைக்கு தூண்டுவதற்கு உதவியுள்ளது-என்றார். (அ)

# சபரிமலை யாத்திரை: முன்னேற்பாடுகள் போதாது!

**கா**ர்த்திகை மாதம் தொடங்கியதும் சபரிமலை தீர்த்தாடன காலமும் தொடங்கிவிட்டது. கார்த்திகை பிறந்ததும் மாலையணிந்து, உடலையும் மனதையும் சுத்தமாக்கி, இயற்கையோடு இரண்டறக் கலந்து ‘சரணம் ஐயப்பா’ என்கிற கோஷத்துடன் மலை உச்சியில் இருக்கும் ஐயப்பனின் சந்நிதானத்தை அடையும்போது பக்தனும் தெய்வமும் ஒன்றில் ஒன்று இணையும் அற்புத உணர்வை வேறு எங்கும் உலகில் காண முடியாது.

மலை உச்சியில் 18 படிகளுக்கு மேல் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கும் ‘தத்வமசி’ என்பதன் பொருளாக வீற்றிருக்கும் ஐயப்பனை தரிசிக்க பக்தர்கள் திரளத் தொடங்கிவிட்டனர்.



இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும், குறிப்பாக, விந்திய மலைக்குக் கீழேயுள்ள அனைத்து மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் ஐயப்பன்மார்களுடன் கேரளத்தில் உள்ள சபரிமலையை நோக்கி நாள் தோறும் பயணித்துக் கொண்டிருக்கின்றன. வைஷ்ணவ தேவி, திருப்பதி போல என்று இந்தியாவின் மகோன்னதமான புண்ணிய தலங்களில் ஒன்றாக சபரிமலை உயர்ந்திருக்கிறது.

சபரிமலையில் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் முதல் தை மாதப் பிறப்பு வரை மண்டல - மகர விளக்கு காலம் என்பது எல்லோருக்குமே தெரியும். அதை எதிர்கொள்ள 10 மாத காலஅவகாசம் திருவதாங்கூர் தேவஸம் போர்டு எனப்படும் கேரள அறநிலையத் துறைக்கு இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் இருந்து இரண்டு மாதங்களுக்கு வரப்போகும் லட்சக்கணக்கான பக்தர்களின் தீர்த்தாடனத்தைக் கையாள வேண்டும் என்பது மாநில அரசுக்கும் தெரியும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொள்ளை நோய்த்தொற்று காரணமாக கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள், கட்டுப்பாடுகள் இருந்ததால் லட்சக்கணக்கான பக்தர்கள் மண்டல - மகர விளக்கு காலத்தில் சபரிமலை யாத்திரையை மேற்கொள்ளவில்லை. இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு பக்தர் கூட்டம் அலைமோதும் என்கிற எதிர்பார்ப்புடன் அரசு தயார் நிலையில் இல்லாமல் இருந்தது ஆச்சரியமாக இருக்கிறது.

சபரிமலை தீர்த்தாடனத்துக்கு பக்தர்கள் லட்சக்கணக்கில் குவியும் போது அதன் மூலம் கேரள மாநிலம் அடையும் பொருளாதார ஆதாயம் சாதாரணமானதல்ல. சபரிமலை செல்லும் பக்தர்கள் கேரள மாநிலத்தின் வடகோடியில் இருக்கும் காசர்கோட்டில் இருந்து தென்கோடியில் இருக்கும் திருவனந்தபுரம் வரையுள்ள பெரும்பாலான கோயில்களையும் தரிசிப்பது வழக்கம். அதனால் அந்தக் கோயில்கள் மட்டுமல்ல, அவை அமைந்திருக்கும் ஊர்களும் பயனடைகின்றன. அப்படியிருக்கும்போது ஆன்மிக சுற்றுலா வரும் வெளிமாநில பக்தர்களுக்கு பலவித உதவிகளும், பாதுகாப்பும், பயணிப்பதற்கான அடிப்படை வசதிகளும் செய்து தர வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

ஆயிரக்கணக்கான பேருந்துகளும், ஏனைய வாகனங்களும் கேரள மாநிலம் முழுவதும் பயணிப்பதையும், குறிப்பாக சபரிமலை அமைந்திருக்கும் மலைப் பாதைகளில் பயணிப்பதையும் கருத்தில் கொண்டு சாலை செப்பனிடும் பணியை முன்கூட்டியே அரசு முடித்திருக்க வேண்டும். கார்த்திகை மாதம் தீர்த்தாடனம் தொடங்கிய பிறகும்கூட, புனலூர் - பொன்குன்னம் பாதையில் 30 கி.மீ. சாலையில் செப்பனிடும் பணியை உடனடியாக நடத்தும்படி உயர்நீதிமன்றம் அரசுக்கு கட்டளையிட வேண்டிய அவலம் ஏற்பட்டது மிகப் பெரிய சோகம்.

நீலிமலை பாதையில் கற்கள் பதிக்கும் வேலை, தீர்த்தாடனம் தொடங்கிய பிறகுதான் அவசர அவசரமாக முடிக்கப்பட்டிருக்கிறது. அரசும் நீதிமன்றமும் தலையிட்டு அழுத்தம் கொடுத்ததால் ஓரளவுக்கு வேலைகள் துரிதமாக்கப்பட்டு முடிந்திருப்பது ஆறுதல் அளிக்கிறது.

சந்நிதானம், பம்பை, நிலக்கல், சிறிய பாதை ஆகியவற்றில் பெரும்பாலான பணிகள் முழுமை அடையாமல் இருப்பதை பக்தர்கள் வேதனையுடன் எதிர்கொள்கிறார்கள். நீலிமலை பகுதியில் ரூ.15 கோடி செலவில் நீலிமலை - அப்பாச்சி மேடு இடையேயான கல் பதிக்கும் பணியை யாத்திரை தொடங்குவதற்கு முன்பே முடிக்காமல் இருந்தது மிகப் பெரிய தவறு. இந்தப் பகுதியில்தான் வழக்கமாக பக்தர்களுக்கு மிக அதிகமான இதய பாதிப்புகள் ஏற்படுவது வழக்கம். பாதிப்புகள் மட்டுமல்ல, உயிரிழப்புகளும்கூட.

காவல்துறை தரும் கணக்குப்படி, நாளொன்றுக்கு 50,000 முதல் 70,000 பக்தர்கள் வர்ச்சுவல் க்யூ (இணையப் பதிவு) மூலம் மலை ஏறுவதற்கான வரிசையில் இணைகிறார்கள். மண்டல பூஜை, மகர விளக்கு உள்ளிட்ட முக்கிய நாள்களில் 1.2 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூட்டத்தை முறைப்படுத்த காவல்துறை முன்னோற்பாடுகளை செய்திருக்கிறது என்றாலும், தேவஸம் போர்டு அதற்கேற்றாற் போல் சுறுசுறுப்பாக இயங்கவில்லை.

தேவஸம் போர்டின் ஏல நடவடிக்கைகள் முழுமை ஆகாததால் சந்நிதானம், பம்பை, நிலக்கல் பகுதிகளில் கடைகளின் எண்ணிக்கை குறைவு. அதனால், ஆரம்பகட்ட பக்தர்கள் சிரமப்படுகிறார்கள். மாதக் கடைசிக்குள் நிலைமை சீராகும் என்று எதிர்பார்க்கலாம். சுகாதாரத் துறை தனது பங்குக்கு ஆங்காங்கே முதல் உதவி சிகிச்சை மையங்களை ஏற்படுத்தி இருக்கிறது. நிலக்கல்லுக்கும் பம்பைக்கும் இடையில் நடத்துநர் இல்லாத 120 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. திரிவேணியில் 10 பயணச்சீட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் வரவேற்புக்குரியவை.

பல்வேறு பகுதிகளில் இருந்தும் விரதம் இருந்து சபரிமலை பயணம் மேற்கொள்ளும் ஐயப்பன்மார்கள் தரிதனம் முடித்துத் திரும்பும்போது இனிமையான அனுபவங்களுடன் செல்ல வேண்டும். கேரள அரசு, வெளிமாநில பக்தர்கள் மூலம் கிடைக்கும் வருமானம் குறித்து மட்டுமே குறியாக இருந்தால் எப்படி?

**(தினமணி)**

# ஆஸ்திரேலிய கடற்கரையில் நிர்வாண போஸ் கொடுத்த 2500 பேர்!

**தோ**ல் புற்றுநோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கலைத் திட்டத்துக்காக ஆஸ்திரேலிய கடற்கரை ஒன்றில் காலை சூரிய ஒளியில் 2500 தன்னார்வலர்கள் நிர்வார்ணமாக போஸ் கொடுத்தனர்.



சிட்னியின் போண்டி கடற்கரையில் இந்த நிகழ்வு நடந்தது.

அமெரிக்க புகைப்பட நிபுணர் ஸ்பென்சர் டுனிக் ஏற்பாடு செய்த திட்டத்துக்கான இந்த நிகழ்வானது, ஆஸ்திரேலியர்களை முறையாக தோல் பரிசோதனை செய்ய ஊக்கப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த திட்டத்துக்காக கடற்கரை போன்ற பொது இடத்தில் நிர்வாணமாகத் தோன்ற அனுமதிக்கும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

உலக புற்றுநோய் ஆராய்ச்சி நிதியத்தின் கூற்றுப்படி உலகிலேயே ஆஸ்திரேலிய நாடானது தோல் புற்றுநோயினால் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளான நாடுகளில் ஒன்றாக திகழ்கிறது.

உள்ளூர் நேரப்படி காலை 3.30 மணியில் இருந்து தன்னார்வலர்கள் கடற்கரையில் இந்த கலைத் திட்டத்தில் பங்கேற்பதற்காக குவியத் தொடங்கினர்.

இந்த திட்டமானது புற்றுநோய் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு சாரிட்டி ஸ்கின் செக் சாம்பியன்கள் (charity Skin Check Champions) என்ற அமைப்போடு சேர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

“தோல் பரிசோதனை குறித்து விழிப்புணர்வை அதிகரிக்கும் வாய்ப்பு நமக்கு கிடைத்திருக்கிறது. இங்கே வந்ததற்காக, இந்தக் கலைத் திட்டத்தை மேற்கொண்டதற்காக நான் பெருமைப்படுகிறேன். உடலையும், பாதுகாப்பையும் இது கொண்டாடுகிறது,” என ராய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் உலகப் புகழ்பெற்ற கலைஞர் டுனிக் கூறினார்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற புரூஸ் ஃபிஷர் எனும் 77 வயது முதியவர், “என்னுடைய வாழ்க்கையில் பாதியளவு நாட்களை சூரிய ஒளியில் செலவழித்திருக்கின்றேன். இரண்டு வீரியம் மிக்க தோல் புற்றுநோய் கட்டிகள் என் முதுகில் இருந்து எடுக்கப்பட்டன,” என ஏஃப்பி செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

“இது ஒரு நல்ல காரணத்துக்கான செயலாக நான் கருதுகின்றேன். போண்டி கடற்கரையில் நான் ஆடைகளை துறந்து நிற்பதை நான் விரும்புகின்றேன்,” என்றார்.

உலகின் மிகச் சிறந்த சில இடங்களில் வெகுஜன நிர்வாணப் படங்களைத் தயாரிப்பதில் டுனிக் நன்கு அறியப்பட்டவர்.



ஈழநாடு



# இலங்கையில் 'ஐஸ்' விற்றால் மரண தண்டனை - புதிய சட்டம் வந்தது!

—— யூ.எல். மப்றூக்

இலங்கையில் 'ஐஸ்' எனப்படும் 'மெத்தம்பெட்டமைன்' (Methamphetamine) போதைப் பொருள் தொடர்பான குற்றச் செயல்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் சிறை தண்டனை விதிக்கும் வகையிலான சட்டம் கடந்த வாரம் (24ஆம் திகதி) தொடக்கம் அமலுக்கு வந்துள்ளது. ஐஸ் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களை தண்டிப்பதற்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் போதுமானவையாக இருக்கவில்லை. அதனால், அந்தச் சட்டம் திருத்தப்பட்டு, அதன் மூலம் மரண தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கடந்த செப்டம்பர் மாதம் 09ஆம் திகதி, அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அது அக்டோபர் 19ஆம் திகதி, '2022ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம்' எனும் பெயரில் நிறைவேற்றப்பட்டது. இந்த நிலையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கடந்த வாரம் செவ்வாய்கிழமை குறித்த சட்டத்தில் தனது கையொப்பத்தை இட்டு, சான்றுப்படுத்தினார். அதனையடுத்து குறித்த திருத்தச் சட்டம் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

**'ஐஸ்' போதைப் பொருள் என்றால் என்ன?**

'மெத்தம்பெட்டமைன்" என்பதே 'ஐஸ்" எனும் போதைப்பொருளாக அறியப்படுகிறது. இது நூறு வீதம்



எம்.எம்.ஜி.பி.எம். றஸாட்

செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்ற போதைப் பொருள் என்கிறார் தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். றஸாட். இது படிகங்களாக காணப்படுகின்ற கலப்படமற்ற போதைப்பொருள் எனவும் அவர் கூறுகின்றார். 'ஐஸ் போதைப் பொருளை ஒரு தடவை உள்ளெடுத்தால், அந்த நபரை அது அடிமையாக்கி விடும்" என்றும், 'பாவித்து 48 மணித்தியாலங்களுக்கு அதன் செயற்பாடு உடலில் இருக்கும்" எனவும் தெரிவிக்கின்றார். இதை அதிகளவு உள்ளெடுத்தால், மரணம் ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகள வில் உள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஐஸ் போதைப்பொருளை உள்ளெடுக்கும் நபர்களிடம், எவ்வித அறிகுறிகளையும் பெரும்பாலும் காணமுடியாது எனவும் றஸாட் கூறினார். 'ஐஸ் போதைப் பொருள் ஒரு தூண்டியாகச் செயற்படும். உதாரணமாக ரத்த ஓட்டம், இதயத்துடிப்பு போன்றவை



அதனால் அதிகரிக்கும். உள்ளெடுத்தால் தூக்கம் வராது".

'இதனைப் பாவிப்பவர்கள் உடல் எடையினை திடீரென இழந்து விடுவர். குறுகிய காலத்துக்குள் மனநோய்க்கு ஆளாகுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது. பாவிப்பவர் தனது உயிரை அவரே மாய்த்துக் கொள்ளும் நிலைக்குச் சென்று விடுவார்" எனவும் றஸாட் விவரித்தார்.

இந்த போதைப்பொருளைப் பாவிப்பவருக்கு பாலியல் தேவை ஏற்படாது எனவும் அவர் கூறுகின்றார். ஐஸ் பாவிக்கும் போது ஒருவரில் 'டோபமைன்" (Dopamine) மிக அதிகளவில் உருவாகும் என்றும், அது அவருக்குள் 'நிஜமற்ற அதீத மகிழ்ச்சி"யை ஏற்படுத்தும் எனவும் றஸாட் குறிப்பிடுகின்றார்.

'ஒரு மனிதன் சந்தோசமாக இருக்கும் போது அவனுள் டோபமைன் அதிகம் உருவாகும். ஒருவர் பாலியல் உறவில் இருக்கும் போது 200 மைக்ரோகிராம் டோபமைன் அவருள் இருக்கும். ஒருவருக்கு விருப்பமானவர் அவரின் அணைப்பில் இருக்கும் போது, அவருக்குள் 250 மைக்ரோ கிராம் டோபமைன் உருவாகும். ஆனால் 'ஐஸ்' போதைப் பொருளை உள்ளெடுக்கும் ஒருவருக்குள் 1100 மைக்ரோகிராம் அளவில் டோபமைன் உருவாகும். இதனால் 'ஐஸ்' போதைப் பொருள் பாவிக்கின்றவர்களுக்கு, அதை விடவும் வேறு மகிழ்ச்சி தேவைப்ப டாது" எனவும் றஸாட் விளக்கமளித்தார்.

**5 கிராம் வைத்திருந்தால் மரண தண்டனை**

இது இவ்வாறிருக்க, 'ஐஸ்" போதைப் பொருளை 05 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் வைத்திருந்தால் மரண தண்டனை அல்லது ஆயுள்கால சிறைத் தண்டனை விதிக்கும் ஏற்பாடுகள் புதிய திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கலால் திணைக்களத்தின் ஊவா மாகாணத்துக்குப் பொறுப்பான உதவி ஆணையாளர் என் சுசாதரன் தெரிவித்தார்.

செயற்கை போதைப் பொருள் தொடர்பான குற்றங்களை தண்டிப்பதற்கு இலங்கையில் இதுவரையில் போதுமானதும், இறுக்கமானதுமான சட்டங்கள் இருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

'உதாரணமாக ஐஸ் போதைப் பொருள் தொடர்பான குற்றமொன்றுக்கு எந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வது? அதற்கு பிணை வழங்க முடியுமா இல்லையா? வழங்க முடியுமாயின் எந்த நீதிமன்றம் வழங்கலாம் போன்ற விடயங்களில் தெளிவின்மை இருந்தது". ஆனால் தற்போதைய திருத்தச் சட்டத்தில்தான் தெளிவாக அவை தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவும் அவர் கூறினார்.

இந்தத் சட்டத் திருத்தத்துக்கு முன்னர், ஐஸ் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்கு மிகக் குறைந்தளவு அபராதங்களும், சிறைத் தண்டனைக



ஜௌரைஜ்

ளுமே வழங்கப்பட்டதாகவும் உதவி ஆணையாளர் சுசாதரன் தெரிவித்தார்.

புதிய சட்டத் திருத்தத்தின்படி, மூன்று கிராமிலிருந்து 5 கிராமுக்கு குறைவான ஐஸ் போதைப்பொருள் குற்றத்தைப் புரியும் ஒருவருக்கு, 2 லட்சம் ரூபாய்க்கு குறையாததும் 5 லட்சம் ரூபாயை விஞ்சாததுமான அபராதம் மற்றும் 10 ஆண்டுகளுக்கு குறையாததும் 20 ஆண்டுகளை விஞ்சாததுமான சிறைத் தண்டனை ஆகியவற்றில் ஏதேனுமொன்று அல்லது அபராதம் மற்றும் சிறை தண்டனை இரண்டும் விதிக்கப்பட முடியும்.

2 கிராமில் இருந்து 3 கிராமுக்கு குறைவான ஐஸ் போதைப் பொருள் குற்றத்துக்கு, 1 லட்சம் ரூபாய்க்கு குறையாததும் 2 லட்சம் ரூபாயை விஞ்



சுசாதரன்

சாததுமான அபராதம் மற்றும் 7 ஆண்டுகளுக்கு குறையாததும் 10 ஆண்டுகளை விஞ்சாததுமான சிறை தண்டனை ஆகியவற்றில் ஏதேனுமொன்று அல்லது அபராதம் மற்றும் மறியல் ஆகிய இரண்டு தண்டனைகளும் வழங்கப்படலாம் என்று, புதிய சட்டம் கூறுகிறது.

இரண்டு கிராமுக்கு குறைவான ஐஸ் போதைப் பொருளுடன் தொடர்பான குற்றத்துக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கு குறையாததும் 50 ஆயிரம் ரூபாயை விஞ்சாததுமான அபராதம் மற்றும் 3 ஆண்டுகளுக்கு குறையாததும் 5 ஆண்டுகளை விஞ்சாததுமான சிறை தண்டனை ஆகியவற்றில் ஏதேனுமொன்று அல்லது அபராதம் மற்றும் மறியற் தண்டனை ஆகிய இரண்டும் விதிக்கப் படலாம்.

ஐஸ் போதைப் பொருளை வியாபாரம் செய்தல், உடமையில் வைத்திருத்தல், இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்தல் ஆகியவை அனைத்தும் மேற்படி தண்டனைகளுக்குரிய குற்றங்களாகக் கருதப்படும். மோர்பீன், கொக்கேன், ஹெரோயின் ஆகிய போதைப்பொருள்கள் தொடர்பான குற்றச் செயல்களுக்கும் இதே சட்டம் சட்டம் செல்லுபடியாகும்.

**மனநோய் பாதிப்பு நிச்சயம் ஏற்படும்**

'ஐஸ்" போதைப் பாவனைக்கு அதிகளவில் இளைஞர்களே பலியாவதாகக் கூறுகிறார் உளநோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் ஏ.ஜீ. மொஹமட் ஜௌரைஜ். இந்தப் போதைப்பொருள் பாவையினால் மூளையில் பாதிப்பு ஏற்படும் என்றும், அந்த நிலைமை சிந்தனையிலும் நடத்தையிலும் மோசமான மாற்றங்களை உருவாக்கும் என்றும் அவர் கூறுகிறார். 'ஐஸ் போதைப்பாவனையினால் யுவெஙவநசஅவைநிளலஉாழளளை எனும் மனநோய் உருவாகும்.

அதனால் தூக்கமின்மை ஏற்படும், எதிலும் அவதானிப்பு இருக்காது., பசிக்காது, அதிகளவில் கோபம் வரும், ஆத்திரம் ஏற்படும், மற்றவர்களைச் சந்தேகப்படுவார், மாயைகள் தோன்றும், இல்லாத விடயங்கள் தோன்றுவது போலவும், கேட்பது போலவும் உணர்வார், தனக்கு எதிராக மற்றவர்கள் ஏதோ செய்வதாக நினைப்பார்கள்" என பாதிப்பின் தன்மை குறித்து அவர் விளக்கிக் கூறினார்.

'ஐஸ் பாவனையினால் ஏற்படும் மனநோய் ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் பெரிதாக இருக்கவில்லை. வெளிநாடுகளில் படிக்கும் போதுதான் அறிந்திருந்தோம். ஆனால் இப்போது இலங்கையில் ஐஸ் பாவனையினால் ஏற்படும் மனநோய் பாதிப்புடன் நபர்கள் சிகிச்சைக்காக வருகின்றமை சாதாரணமான விடயமாகியுள்ளது" எனவும் டாக்டர் ஜௌரைஜ் குறிப்பிட்டார்.

ஐஸ் போதைப் பொருளால் மனநோய் பாதிப்பு ஏற்பட்டால் அவர்களை வைத்தியசாலையில் தங்க வைத்துச் சிகிச்சையளிப்பதுதான் சிறந்தது எனவும் அவர் கூறுகின்றார்.

'ஒவ்வொருவரையும் பொறுத்து அவர்கள் பாதிப்புக்குள்ளாகும் காலம் மாறுபடும். சிலர் ஐஸ் போதைப் பொருள் பாவிக்கத் தொடங்கி ஓரிரு வாரங்களிலேயே மனநோய் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றமையினை கண்டுள்ளோம்" என்று கூறும் அவர், ஐஸ் போதைப் பொருள் பாவிக்கும் அனைவரும் மனநோயினால் பாதிக்கப்படுவர் என்கிறார். இதற்காக சிகிச்சையெடுத்துக் கொள்வோர் 'ஐஸ்" போதைப் பாவனையிலிருந்து முழுமையாக விடுபடுவதோடு, வழங்கப்படும் மருந்துகளை முறையாகப் பாவிக்கவும் வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

'அவ்வாறு நடந்து கொண்டால் இரண்டு மூன்று வாரங்களில் நோயிலிருந்து விடுபட முடியும்" எனக் குறிப்பிடும் டாக்டர் ஜௌரைஜ், சிலருக்கு நோயிலிருந்து விடுபட அதிக காலம் எடுக்கும் எனவும் தெரிவித்தார். (பிபிசி)

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**06)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ......................................... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07)** **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09)** **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10)** **தனிச்சொல்லை எழுதுக.**

i) வீண் செலவு செய்பவன் : ..........................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11)** **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12)** **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ................................

ii)  ................................

(2 புள்ளிகள்)

**13)** **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ..........................................................................

ii) old / How / you? / are : .......................................................................... (2 புள்ளிகள்)

**14)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..........................................................

ii) தொளஹ : .................................................... (02 புள்ளிகள்)

**15)** **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................

ii) அங்கே பாருங்கள் : .......................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** 

| | |
|---|---|
| 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..........................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

கல்வி tv CHANNEL-1

**29.11.2022**
**செவ்வாய்க்கிழமை**

| **நேரம்** | **தரம்** | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**29.11.2022**
**செவ்வாய்க்கிழமை**

| **நேரம்** | **தரம்** | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# காணாமல்போன 4 மீனவர்கள் 64 நாட்களின் பின் அந்தமானில்!

மட்டக்களப்பு, நவ. 29

**கடந்த செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆழ்கடலுக்குச் சென்று காணாமல் போன வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்களும் அந்தமான் தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.**

காணாமல்போன மீனவர்கள் தொடர்பான தகவல் 64 நாட்களின் பின்னர் நேற்று முன் தினம் மாலை தகவல் கிடைத்துள்ளதாக மீனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அந்தமான் தீவிலிருந்த தமது தொலை பேசிக்கு அழைப்பொன்று வந்ததாகவும் அதில், மீனவர்கள் படகுடன் மீட்கப்பட்டு தற்போது கடல் பாதுகாப்பு படையின் பாதுகாப்பில் இருப்பதாகவும் தமக்கு தகவல் கிடைத்ததாக காணாமல்போன மீனவர் உமர்தீன் அசன் அலி என்பவரின் மகன் முஜாஹித் கூறினார்.

குறித்த தகவல் தொடர்பில், மீனவர் சங்கம் மற்றும் துறைமுக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் முஜாஹித் மேலும் தெரிவித்தார்.

(அ)

# 1,444ஏக்கருக்கான யூரியா காரைதீவில் விநியோகம்



அம்பாறை, நவ. 29

காரைதீவு கமநல பிரதேசத்திற்குட்பட்ட 1444 ஏக்கருக்கான யூரியா பசளை நேற்று முன்தினம் விநியோகம் செய்யப்பட்டது.

காரைதீவு பிரதேச கமநல சேவைகள் நிலைய பொறுப்பதிகாரி மார்க்கண்டு சிதம்பரநாதன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

நிகழ்வில் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் மற்றும் விவசாய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு இதனை வழங்கினர்.

இதன்போது சத்துட்ட கொம்போஸ் பசளையும், திரவ கொம்போஸ் பசளையும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.

யூரியா பசளை ஏக்கர் ஒன்றுக்கு 63 கிலோ வீதம் வழங்கப்பட்டது. 50 கிலோ யூரியா பசளை பேக்கின் விலை 10 ஆயிரம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# சாய்ந்தமருதில் வர்த்தக சந்தை

அம்பாறை, நவ. 29

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வர்த்தக சந்தையானது, இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை சாய்ந்தமருது வொலிவேரியின் பல்தேவைக் கட்டட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவில் உள்ள தொழில் முயற்சியாளர்களினது வியாபாரத்தை முன்னேற்றவும், பிரபல்யம் அடையச் செய்யும் வகையிலும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில், இவ்வர்த்தக சந்தையில் சாய்ந்தமருது தொழில் முயற்சியாளர்களது பொருட்களின் விற்பனையும் கண்காட்சியும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில், தொழில் முயற்சியாளர்களது முன்னேற்றத்திற்கு பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்து, பங்களிப்புச் செய்ய முடியும் என்பதால் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைத்து பொது மக்களுக்கும் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஆரையம்பதியில் ஆணின் சடலம்!

மட்டக்களப்பு, நவ. 29

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, திருநீற்றுக்கேணி குளம் பகுதியிலிருந்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஆரையம்பதியை சேர்ந்த 57 வயதுடைய வீரக்குட்டி தவராஜா என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஐந்து தினங்களாக குறித்த நபர் காணாமல் போயிருந்த நிலையில், குடும்பஸ்தர் ஒருவர் அவரை தேடும் முயற்சியில் ஈடுபட்டார்.

அதன்போது திருநீற்றுக்கேணி குளம் பகுதியில் காணாமல் போனவரது பாதணி இருப்பதை கண்டு குளப்பகுதியில் தேடியபோதே சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் வலிப்பு நோயினால் நீண்ட காலம் பாதிக்கப்பட்டவர் எனவும் மதுபோதைக்கு அடிமையானவர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி வி.தியாகேஸ்வரியின் உத்தரவுக்கமைய காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சம்பவ இடத்துக்கு விரைந்து, சடலத்தினை பார்வையிட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(அ)

# சிறப்பாக நடைபெற்ற றோட்டரி புதிய தலைவரின் பதவியேற்பு



அம்பாறை, நவ. 29

கல்முனை றோட்டரிக் கழகத்தின் 22 வது தலைவராக றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் பதவி பிரமாணம் செய்து கொண்டார்.

புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினது பதவியேற்பு வைபவம் காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பிரதம அதிதியாக மாவட்ட ஆளுநர் றோட்டரி மாவட்ட ஆளுநர் றோட்டரியன் புவுது டி சொய்சா மற்றும் கௌரவ அதிதியாக காரைதீவுப்பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

முன்னாள் தலைவர் றோட்டரியன் ஸ்ரிபன் புஸ்பராஜா சம்பிரதாய பூர்வமாக டொங்கோ, தலைவரணியும் றோட்டரி பதக்கமாலை மற்றும் ஆவணங்களையும் புதிய தலைவர் றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தனிடம் வழங்கினார்.

இதன்போது இவ் வருடம் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட காரைதீவு மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

புதிய தலைவராக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கல்லாறு நிலைய பொறுப்பதிகாரி றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன், புதிய செயலாளராக றோட்டரியன் கே.குகதாஸன், புதிய செயலாளராக றோட்டரியன் எம்.சிவபாத சுந்தரம் மற்றும் புதிய பணிப்பாளர் சபையினர் சம்பிரதாய பூர்வமாக பதவியேற்றார்கள். (அ)

# கல்முனை றோட்டரி கழகத்தால் சாதனை மாணவர் கௌரவிப்பு

கல்முனை, நவ. 29

கல்முனை றோட்டரிக் கழகத்தால் கடந்த வருடம் காரைதீவில் உயர்தரத்தில் சாதனை படைத்த ஆறு மாணவர்கள் பொன்னாடை போர்த்தி,பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை றோட்டரிக் கழகத்தின் 22 ஆவது தலைவராக றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் பதவி பிரமாணம் செய்த நிகழ்விலேயே இக்கௌரவிப்பு விழா நடைபெற்றது.

புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினது பதவியேற்பு வைபவம் காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.



பிரதம அதிதியான மாவட்ட ஆளுநர் றோட்டரி மாவட்ட ஆளுநர் றோட்டரியன் புவுது டி சொய்சா, மற்றும் கௌரவ அதிதியான காரைதீவுப்பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், தலைவர் றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன்ஆகியோர் இக் கௌரவத்தை வழங்கினார்கள்.

இதன்போது, இவ் வருடம் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

உயிரியல் துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத் தைப் பெற்ற காரைதீவைச் சேர்ந்த மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷ் முதலில் பாராட்டி கௌரவிக்கப்பட் டார்.

பின்னர் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மாணவிகளான சகாதேவராஜா டிவானுஜா, லாகநாதன் புவித்ரா, தங்கவடிவேல் டயானு, ராஜேஸ்வரன் கம்ஷாயினி ஆகியோர் மருத்துவத்துறைக்குத் தெரிவான மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து ரஜிநாதன் துர்க்கா பொறியியல் துறைக்கு தெரிவாகியிருந்தமைக்காக பாராட்டி கௌரவிக்கப்பட்டார். (அ)

### எரிசக்தி உள்கட்டமைப்பு மீதான

# ரஷ்யாவின் தாக்குதல்கள் இனப்படுகொலைக்கு சமம்

## சாடுகின்றது உக்ரைன்

கீவ், நவ.29

உக்ரைனிய எரிசக்தி உள் கட்டமைப்பு மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் இனப்படு கொலைக்கு சமம் என்று உக்ரைனிய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முக்கிய உள்கட்டமைப்பு வசதிகள் மீதான தாக்குதல்கள் முழு உக்ரைனிய தேசத்தையும் குறிவைத்தன மற்றும் உக்ரைனை சரணடைய கட்டாயப்படுத்தும் முயற்சியாக இருந்தது என வழக்கறிஞர் ஜெனரல் ஆண்ட்ரி கோஸ்டின் கூறினார்.

11,000க்கும் மேற்பட்ட உக்ரைனிய குழந்தைகள் வலுக்கட்டாயமாக ரஷ்யாவிற்கு நாடு கடத்தப்பட்டனர் என்றும் தெரிவித்தார்.

பெப்ரவரி 24 அன்று ரஷ்யா தனது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியதில் இருந்து 49,000க்கும் மேற்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு குற்றங்கள் பற்றிய அறிக்கைகளை அவரது அலுவலகம் விசாரித்து வருவதாகவும் கோஸ்டின் கூறினார்.

இனப்படுகொலை என்ற சொல் ஒரு குழுவை அழிக்கும் முயற்சியைக் குறிக்கிறது. அத்தகைய நோக்கம் எதுவும் இல்லை என்று ரஷ்யா மறுக்கிறது.

ரஷ்யாவின் தொடர்ச்சியான தாக்குதல்களைத் தொடர்ந்து, உக்ரைன் முழுவதும் மில்லியன் கணக்கான மக்கள் உறைபனி காலநிலையில் மின் வெட்டை எதிர்கொள்கின்றனர். மின்சாரம் துண்டிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் இணைக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

ஆனால், 14 பிராந்தியங்களில் உள்ள மக்கள் மற்றும் தலைநகர் கீவ் ஆகியவை



பயன்பாட்டுக் கட்டுப்பாடுகளின் கீழ் உள்ளன என்று ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இனப்படுகொலை என்பது ஐ.நா. இனப்படுகொலை மாநாட்டால் வழங்கப்பட்ட வரையறையின்படி, ஒரு தேசிய, இன, இன அல்லது மதக் குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்தை உள்ளடக்கியது. (அ)

# உள்ளாடையுடன் வழக்கை விசாரித்த பெண் நீதிபதி!

பொகோட்டா, நவ.29



கொலம்பியாவில் பெண் நீதிபதி ஒருவர் நீதிமன்ற விசாரணையின் போது கையில் சிகரெட்டுடன் உள்ளாடை மாத்திரமே அணிந்த நிலையில் வழக்கை விசாரித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொலம்பியாவை சேர்ந்த நீதிபதி விவியன் போலானியா என்பவர் அண்மையில் சூம் அழைப்பு மூலமாக , காரில் வெடிகுண்டு வைத்திருப்பதாக வந்த மிரட்டல் வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தார்.

இவ் விசாரணையின்போது விவியன் உள்ளாடை மேல் கோட் அணிந்திருந்தார் எனவும், கையில் சிகரெட் புகைத்தவாறு வழக்கை விசாரித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த வழக்கறிஞர்கள், நீதிபதி விவியனின் நடவடிக்கை மரியாதைக் குறைவாகவும் முகம் சுளிக்கும் விதத்திலும் இருந்துள்ளதாகத் தெரிவித்து அவர் மீது புகார் அளித்துள்ளனர்.

மேலும் அவர் முறையாக குற்றவாளியிடமோ, வழக்கறிஞர்களிடமோ அவர் செவிசாய்க்காமல், தனி உலகத்தில் மிதந்துக்கொண்டிருந்தார் என்றும் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்நிலையில் நீதிபதி பொறுப்பில் இருந்துகொண்டு அநாகரீகமாக நடந்துக்கொண்டமைக்காக , விவியனை நீதித்துறை ஒழுங்கு ஆணையம் மூன்று மாதங்களுக்கு தற்காலிக பணி நீக்கம் செய்து உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐ. நா. தலைமையகத்தில் மகாத்மா காந்தியின் சிலை

ஜெனிவா, நவ.29

ஐ.நா. பாதுகாப்பு துறை தலைவர் பொறுப்பை இந்தியா அடுத்த மாதம் டிசெம்பர் ஏற்கிறது. இதையொட்டி மகாத்மா காந்தியின் மார்பளவு சிலை ஒன்றை ஐ.நா.வுக்கு இந்தியா பரிசளித்துள்ளது.



இந்த சிலை ஐ.நா. தலைமையகத்தின் வடபகுதியில் உள்ள புல்வெளியில் நிறுவப்படுகிறது. அடுத்த மாதம் 14 ஆம் திகதி மத்திய வெளியுறவு அமைச்சர் ஐ.நா. செல்லவுள்ள நிலையில். அப்போது இந்த சிலை திறக்கப்படுகிறது.

இந்த சிலை திறப்பு விழாவில் ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் மற்றும் பாதுகாப்பு துறையின் 15 உறுப்பு நாடுகளின் பிரதி நிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசத்தந்தை மகாத்மாவின் இந்த சிலையை புகழ் பெற்ற சிற்பியும், பத்மஸ்ரீ விருது பெற்றவருமான ராம் சுதர் வடிவமைத்துள்ளார். இதன் மூலம் ஐ.நா. தலைமையகத் தில் முதல் முறையாக மகாத்மா காந்தி சிலை இடம்பெறுகிறது. முன்னதாக கடந்த 1982ஆம் ஆண்டு சூரிய கடவுளின் சிலை ஒன்றை இந்தியா ஐ.நா.வுக்கு பரிசளித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

# இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட 14 பேர் சுவர் இடிந்து உயிரிழப்பு!

கமரூனில் 20 மீற்றர் உயரமுள்ள அணைகட்டுப் பகுதியின் அடிவாரத்தில் உள்ள மைதானத்தில் இடம்பெற்ற இறுதிச் சடங்கின்போது மண்சுவர் இடிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



கமரூன் தலைநகர் யவுண்டே கனமழை காரண மாக இந்த ஆண்டு பல பேரழிவை சந்தித்தது. வெள்ளத்தால் அந்த பகு தியின் உள்கட்டமைப்பு சிதைந்தது டன், ஆயிரக்கணக்கானோர் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் அங்குள்ள 20 மீற்றர் உயரமுள்ள அணைகட்டுப் பகுதியின் அடிவாரத்தில் உள்ள மைதானத்தில் இறுதிச் சடங்கு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அப்பகுதி மக்கள் அதில் கலந்து கொண்டிருந்தனர். அப்போது நிலச்சரிவு ஏற்பட்டு மண்சுவர் அவர்கள் மேல் இடிந்து விழுந்தது.

இதில் குறைந்தது 14 பேர் உயிரிழந்ததாக அப்பகுதி ஆளுநர் தெரிவித்துள்ளார். மீட்பு படையினரின் உதவியுடன் நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு மத்திய மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவதாகவும், மண்ணில் புதையுண்ட மற்றவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

# கோவிட் கட்டுப்பாட்டுக்கு எதிராக சீனாவில் கிளர்ந்தெழுந்த மக்கள்

பீஜிங், நவ.28

சீனாவில் அமுல்படுத்தப்பட்டுள்ள கடுமையான கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிராக, பல்வேறு நகரங்களில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜிங்கின் சிங்குவா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில்பங்கேற்றனர்.

அந்த நாட்டின் நேரப்படி ஞாயிற்றுக்கிழமை காலை 11:30 மணிக்கு மாணவர்கள் கேன்டீனின் நுழைவாயிலில் பதாகைகளைப் ஏந்தியப்படி போராடங்களில் ஈடுபடத் தொடங்கினர், பின்னர் அதிகமான மக்கள் திரள ஆரம்பித்தனர்.

போராட்டத்தின் போது மாணவர்கள் 'தேசிய கீதம்' மற்றும் 'சர்வதேசம்' பாடினார்கள். பின்னர், சில மாணவர்கள் அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் எதிராக கோஷங்களை எழுப்பத் தொடங்கினர், ஆனால், எதிர் கோஷங்கள் சத்தமாக இல்லை.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் உண்மையில் என்ன கோஷம் எழுப்புவது என்பது தெரியாமலே பங்கேற்றிருந்தனர். மேலும், 'கொரோனா கட்டுப்பாடு வேண்டாம்', 'சுதந்திரம் வேண்டும்', 'சுதந்திரம் வெல்லும்' என்று மாணவர் கோஷங்களை எழுப்பினர்.



சீனாவின் மிகப்பெரிய நகரமாகவும், உலகளாவிய நிதி மையமாகவும் உள்ள ஷாங்காயில் நடந்த போராட்டத்தில், சிலர் மெழுகுவர்த்தி ஏற்றியதையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பூங்கொத்துகள் வைத்ததையும் காண முடிந்தது.

கடந்த வியாழக்கிழமை, ஜின்ஜியாங் மாகாணத்தின் தலைநகரான உரும்கியில் உள்ள உயரமான அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில், 10 பேர் உயிரிழந்ததை அடுத்து, கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிரான போராட்டங்கள் மேலும் தீவிரமடைந்துள்ளன.

இந்த எதிர்ப்பு இந்தப் போராட்டத்தின் போது, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு எதிராக சிலர் வெளிப்படையாகவே கோபத்தை வெளிப்படுத்தினர்.(அ)

# மக்கள் போராட்டம் இன்னும் ஓயவில்லை

## அரசுக்கு லால்காந்த எச்சரிக்கை

கொழும்பு, நவ. 29

மக்கள் போராட்டம் இன்னும் ஓயவில்லை என்பது ராஜபக்சக்கள் உள்ளிட்ட ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

கொத்மலை தேர்தல் தொகுதியின் மக்கள் சந்திப்பு கூட்டம் நேற்றுமுன்தினம் கொத்மலை - பூண்டுலோயா பகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



நாட்டை விட்டோடிய பசில் ராஜபக்ஷ அண்மையில் நாடு திரும்பினார். பலமான அரசியல் இயக்கத்தை அவர் உருவாக்கப்போவதாக சிலர் கூறித்திரிகின்றனர். விமான நிலையம் வந்த பசிலுக்கு அவரின் சகாக்கள் மற்றும் அடியாட்களால் அரச அனுசரணையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

ஆனால் தான் நாட்டை விட்டு செல்ல முற்படுகையில் விமான நிலைய ஊழியர்கள் தன்னை எப்படி கவனித்தார்கள் என்பதை பசில் ராஜபக்ஷ மறந்துவிடக்கூடாது. மக்கள் போராட்டம் இன்னமும் ஓயவில்லை. கோரிக்கைகள் அவ்வாறே உள்ளன.

கொள்ளையர்கள், பொருளாதாரத்தை நாசமாக்கியவர்கள் தண்டிக்கப்படவேண்டும், கொள்ளையடிக்கப்பட்ட வளங்கள் நாட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என மக்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். இதையும் பசில் உள்ளிட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை, ஹிட்லர் பற்றி கதைப்பதற்கு முன்னர் காற்சட்டையை எப்படி சரியாக அணிவது என்பதை ரணில் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (அ)

# வடக்கு ரயில் சேவைகள் 5 மாதங்களுக்கு நிறுத்தம்

கொழும்பு, நவ. 29

சேதமடைந்துள்ள ரயில் மார்க்கத்தை சீரமைக்கும் வரை ஜனவரி 15 ஆம் திகதி முதல் 5 மாதங்களுக்கு மஹவயிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவை நிறுத்தப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (அ)

# சாரதி அனுமதிப்பத்திர முறையில் மாற்றம் கொண்டுவருகிறது அரசு!

கொழும்பு, நவ. 29

சாரதி செய்யும் தவறுகளுக்கு புள்ளிகளை குறைத்து அதனுடன் தொடர்புடைய தண்டனைகளை விதிக்கும் முறை எதிர்வரும் காலங்களில் அமுல்படுத்தப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

வீதியில் வாகனங்களைச் செலுத்தும்போது தவறு செய்யும் சாரதிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்தின் கீழ் 24 புள்ளிகளுக்கு உட்பட்டு அபராதம் விதிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒரு சாரதி 24 புள்ளிகள் வரம்பை அடைந்தவுடன், அவரது சாரதி உரிமம் ரத்து செய்யப்படும், மேலும் மீண்டும் சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள பரீட்சை மற்றும் பயிற்சி மூலம் உரிமத்தை மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

புதிய முறையின் கீழ், பொலிஸ், நீதிமன்றங்களில் அபராதங்களை சம்பவ இடத்திலோ அல்லது தபால் நிலையத்திலோ, ஒன்லைனில் செலுத்தலாம் என்று அமைச்சர் லசந்த அழகியவண்ண கூறினார்.

ஒரு சாரதிக்கு அபராதம் விதிக்கப்பட்டு, ஒரு குற்றத்திற்காக புள்ளிகள் கழிக்கப்பட்டால், அந்த நபர் அதை நீதிமன்றத்தில் சவால் செய்யலாம் மற்றும் குற்றவாளிக்கு நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்படும், மேலும் புள்ளிகள் கழிக்கப்படும்.

ஒரு சாரதி ஒரு வருடத்தில் 2 புள்ளிகளை மட்டுமே இழந்தால், அடுத்த ஆண்டு 24 புள்ளிகளை மீட்டெடுக்க அவருக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும்.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நடைமுறையில் உள்ள இந்த முறையை அடுத்த வருடம் அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சு உத்தேசித்துள்ளதாக லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் வெளியிடப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் கூறினார். (அ)

# மாவீரர்நாளுக்கு எவ்வித தடைகளும் ஏற்படுத்தாமை நல்லிணக்க சமிக்ஞை

## சபையில் கூறினார் செல்வம் எம்.பி.

கொழும்பு, நவ. 29

மாவீரர்நாள் நினைவு கூரலுக்கு பெருமளவில் எவ்வித தடைகளும் ஏற்படுத்தவில்லை என்றும் அதனை வரவேற்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் நல்லிணக்க சமிக்ஞை என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் ஒரு சில இடங்களில் மட்டும் தமது பிள்ளைகள் மற்றும் உறவு



களை நினைவுகூர தடைகள் ஏற்படுத்தப்பட்டமையும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்

துயர் .நெற்
THUYAR.NET

துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்

ஈழநாடு
Eelanadu

ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்

யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்

DAN news

டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்

விபரங்களுக்கு: thuyar.net
Tel: 0094 752 225 225

# மருத்துவமனையில் மைத்துனரை கத்திரிக்கோலினால் குத்திய நபர்!

கொழும்பு, நவ. 29

பாணந்துறை ஆதார மருத்துவமனைக்குள் நுழைந்த நபர் ஒருவர் தனது மைத்துனரை நான்கு இடங்களில் கத்திரிக்கோலால் குத்தியதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கையை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதால் கோபமடைந்த மைத்துனரே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்வத்த பிரதேசத்தில் வசிக்கும் இளம் தம்பதியினருக்கு இடையில் கடந்த 25ஆம் திகதி பிற்பகல் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், தாக்குதலில் காயமடைந்த பெண் பாணந்துறை ஆதார மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறிது நேரத்தில் தாக்குதலுக்கு இலக்கானவரின் கணவரும் அங்கு வந்தார். இவர்கள் இருவரும் மருத்துவமனையின் ஆரம்ப சிகிச்சைப் பிரிவில் இருந்தபோது, தகராறு குறித்து அறிந்த பெண்ணின் மூத்த சகோதரர் ஒருவரும் மருத்துவமனைக்கு வந்தார்.

மைத்துனரின் தாக்குதலால் தங்கைக்கு ஏற்பட்ட காயங்களைப் பார்த்த அந்த நபர், மருத்துவமனையில் இருந்த கத்திரிக்கோலை எடுத்து தங்கையின் கணவனின் வயிற்றிலும் முதுகிலும் தாக்கியுள்ளார்.

மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் தலையீட்டினால் மோதல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வயிறு மற்றும் வெளிப் பகுதியில் 4 இடங்களில் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்த இளைஞன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், தாக்கிய நபர் தப்பி ஓடிவிட்டதாகவும் மருத்துவமனை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# சந்தையில் பால்மா மீண்டும் தட்டுப்பாடு?

கொழும்பு, நவ. 29

சந்தையில் மீண்டும் பால் மாவுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் இணைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதற்கு, சுங்கத் திணைக்களத்தின் அலட்சியப்போக்கே காரணமெனவும் அவர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மேலும், தற்போது நாடளாவிய ரீதியில் பால்மாவுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. இறக்குமதி 50 சதவீதத்தினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மறுபுறத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பால்மாவை விடுவிக்காமல் சுங்கத் திணைக்களத்தினரும், ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டு அதிகார சபையினரும் அலட்சிய போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

இதனால் தற்போது இறக்குமதி செய்யப்பட்ட பால்மா காலாவதியான பின்னர் கால்நடைகளுக்கான தீவனமாகவே வழங்கப்படுகின்றது. - என்றார்.

# அபிவிருத்திக்காக சட்ட திட்டங்களை உரிய வகையில் நிறைவேற்றுவேன்

## வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், நவ. 29

வட மாகாண ஆளுநர் என்ற வகையில் மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களுக்காக சட்ட திட்டங்களை உரிய வகையில் நிறைவேற்றுவேன் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

ஆளுநர் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் சட்டவிரோதமாக இரண்டு நியதிச்சட்டங்களை உருவாக்கியுள்ளதாக பல்வேறு தரப்புக்களும் சுட்டிக்காட்டியதுடன், மூத்த நிர்வாக சேவை அதிகாரியான அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஆளுநர் சட்டவிரோத தீர்மானங்கள் விவகாரத்தில் தனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை யென அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில்,

ஆளுநர் தான் நினைத்தபடி நியதிச் சட்டங்களை உருவாக்கி வர்த்தமானி வெளியிடுகிறார் என சிலர் தம்மை மக்கள் மத்தியில் தலைவர்களாகக் காட்ட முயல்கின்றனர்.

வட மாகாண சபை செயற்பாட்டில் இல்லாத காலத்தில் மக்கள் நலன் சார்ந்த பல நியாதிச்ச சட்டங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டு செயல்படுத்தாமல் உள்ளது.

ஆளுநரின் அதிகாரத்தின் கீழ் 154 சி மாகாண சபையொன்றுக்கு நியதிகளை இயற்றும் அதிகாரம் அவற்றில் உள்ள விடயங்கள் தொடர்பான நிறைவேற்று அதிகாரம் அந்த மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட மாகாண ஆளுநரால் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையின் அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது கீழ்நிலை அதிகாரிகள் மூலமாகவோ செயல்படுத்தப்படும்.

பிரிவு 154 எவ் அதைத்தான் அரசியலமைப்புச் சட்டம் சொல்கிற நிலையில் ஒவ்வொரு சட்டமும் மாகாண நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

பல சட்டங்கள் பல ஆண்டுகளாக முடிக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ள நிலையில் சிலருக்கு மறுபரிசீலனை தேவைப்படுகிறதோடு தமது அதிகார வரம்பு தெரியாமல் பேசுகின்றனர்.

அரசியலமைப்பில் எழுதப்பட்ட மகாண அதிகாரங்கள் பல தமது செயல்பாடுகளை செய்யாத நிலையில் அவை ஒவ்வொன்றாகச் சரிபார்க்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிர்வாக ரீதியாகவும் இடைவெளிகள் உள்ளதோடு அதிபர் ஆசிரியர்களின் இடமாற்றங்கள் யாழ்ப்பாணத்திற்கு சாதகமான கொள்கையைக் கொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் மாகாண அரச சேவை சில வட்டத்துக்குள் முடக்கி விடப்பட்ட நிலையில் சகல மக்களுக்கும் சென்றடையும் வகையில் இலகுபடுத்தப்பட்டுள்ளது.

ஆகவே ஆளுநர் என்ற வகையில் வடக்கு மக்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள உரிய சட்ட திட்டங்களை செயல்படுத்துவேன். யாரும் எனக்கு கற்பிக்க வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உலகின் சிறந்த 100 புகைப்படங்களில் கோட்டாபயவின் அலுவலகமும் ஒன்று!



கொழும்பு, நவ. 29

பிரபல ரைம்ஸ் பத்திரிகை 2022ஆம் ஆண்டின் சிறந்த 100 புகைப்படங்களில் ஒன்றாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வலியுறுத்தி அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் மக்கள் நுழைந்த பின் எடுக்கப்பட்ட புகைப்படமொன்றையும் தெரிவு செய்துள்ளது.

ஜூலை 15ஆம் திகதி மக்கள் போராட்டக்காரர்கள் கோட்டாவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் நுழைந்ததை தொடர்ந்து, ஜனாதிபதி தப்பியோடி தலைமறைவானார்.

அதன்பின் அவரது அலுவலகம் அலங்கோலமான நிலையில் காணப்பட்ட புகைப்படம் வைரலானது.அந்த புகைப்படத்தையும் 2022 ஆம் ஆண்டின் சிறந்த புகைப்படங்களில் ஒன்றாக ரைம்ஸ் சஞ்சிகை தெரிவு செய்துள்ளது.

இந்த 100 புகைப்படங்களை டைம்ஸ் இதழின் 8 போட்டோ எடிட்டர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த ஆண்டு பல்வேறு நிகழ்வுகள் நிறைந்த ஆண்டாக உள்ளது என்பதை காட்டவே இந்த 100 புகைப்படங்களை தேர்ந்தெ டுத்ததன் நோக்கம் என ரைம்ஸ் இதழ் தெரிவித்துள்ளது. (அ)



# காணி சுவீகரிப்பை எதிர்த்து காரைநகரில் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 29

காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/44 கிராம சேவகர் பிரிவில் உள்ள, 44 குடும்பங்களுக்கு சொந்தமான 11 ஏக்கர் காணிகளை இராணுவத்துக்காக அளவிடுவதற்கு அப்பகுதி மக்கள் நேற்று பாரிய எதிர்ப்பை வெளியிட்டனர்.

குறித்த காணியை அளவிடுவதற்கு வந்த நில அளவை திணைக்களத்தினர் மக்களின் எதிர்ப்பையடுத்து அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

நாங்கள் சொந்த காணிகள் இல்லாமல் வாடகை வீடுகளில் இருந்து மழையிலும் தண்ணீரிலும் அல்லலப்படுகின்றோம். எங்களது நிலையை கருத்தில் கொள்ளாது இராணுவத்தினருக்கு காணி அளவிடுவதற்கு முயற்சிக்கின்றனர். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அண்மையில் வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், மக்களது காணிகளை மக்களுக்கே வழங்குவதாக ஆளுநர் குறிப்பிட்டிருந்தார். இது இவ்வாறு இருக்கு நில அளவை திணைக்களத்தினர் இன்றையதினமும் (நேற்று) காணி அளவீட்டுக்கு வருகைதந்திருக்கின்றனர்.

காரைநகர் பிரதேச செயலர் தமக்கு காணி அளவிடுமாறு அறிவித்தல் வழங்கிய நிலையிலேயே தாங்கள் காணி அளவிடுவதற்கு வருகை தந்ததாக நில அளவை திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கை தொடருமானால் எங்களது போராட்டங்களும் தொடரும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த போராட்டத்தில் காணியின் உரிமையாளர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், சமூகமட்ட அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# இ.போ.ச. யாழ். சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்!





யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் நேற்று ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண சாலை பஸ் ஒன்று சேவையில் ஈடுபட்டிருந்தபோது, அதில் கடமையிலிருந்து ஊழியர் ஒருவர் வசாவிளான் பகுதியில் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்கானார்.

தனியார் பஸ் தரப்பினருடனான தகராற்றின் விளைவாக இந்த கத்திக்குத்து நிகழ்ந்ததாகவும், தாக்குதலில் பலர் ஈடுபட்டிருந்தபோதும், ஒருவர் கைதாகி, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் இ.போ.ச தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர் ஆபத்தான நிலையில், அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் தமது பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தி யாழ் சாலை ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். (அ)

## மாகாண...

சர்ச்சையாக வெடித்துள்ளது. இந்நிலையில், அதனை நியாயப்படுத்தி வடக்கு ஆளுநர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். இதற்கு பதிலளிக்கும் விதமாகவே சி. தவ ராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, "எக் கருமங்கள் தொடர்பில் நியதிச் சட்டங் கள் ஆக்குவதற்கு மாகாண சபை தத்து வமுடையதாகவுள்ளதோ, அக்கருமங் களை உள்ளடக்குவதான நிறைவேற்று தத்துவமானது, அம்மாகாண சபை எம்மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட் டதோ அம் மாகாணத்திற்கான ஆளு நரினால், ஒன்றில் நேரடியாகவோ அல்லது அமைச்சர்கள் சபையை சேர்ந்த அமைச்சர்கள் மூலமாகவோ அல்லது அவருக்கு கீழமைந்த அலு வலர்கள் மூலமாகவோ '154இ' என்னும் உறுப்புரைக்கு இணங்கள பிரயோகிகப் படுதல் வேண்டும் என்று அரசமைப் பின் '154இ' கூறுகிறது.

இதன்படி, சட்டவாக்க அதிகாரம் மாகாண சபைக்கு உரியது. சட்டம் ஆக் கப்பட்ட பின்னர் அதை செயல்படுத் தும் அதிகாரமே ஆளுநருக்கு உரியது. அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். அவர் சட்டத்தை ஆக்கமுடியது. சட்ட வாக்கம் பாராளுமன்றத்துக்கு உரியது. இது போன்றதே மாகாண சபையின் விடயமும். இது புரியாதவரே ஆளுந ராக இருக்கிறார் - என்றும் அவர் சாடி னார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 14 இல்)

## இனப்பிரச்னை...

உரிமை விடயத்தில் அரசாங்கம் நழு விச்செல்லும் போக்கை கடைப் பிடிக் கக்கூடாது என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரி வித்தார். பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இம்முறை எமக்கு அவமானத் தோல்வி. இந்த தோல்விக்கான கார ணம் என்ன என்பதை பார்க்கவேண் டும். ஜெனிவா தீர்மானங்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் நாங் கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். மாறாக மனித உரிமை விடயத்தில் நலுவுவதற்கான முயற்சிகளை செய்யக் கூடாது. அர சாங்கம் தொடர்ந்து மனித உரிமை பேரவையின் தீர்மா னங்களை அவ மதிக்கும் வகையிலேயே செயல்பட்டு வந்திருக்கின்றது.

இனங்களுக்கு இடையில் வெறுப் பூட்டும் பேச்சுக்களை பேசிவந்த நபரை ஒருநாடு ஒருசட்டம் செயலணியின் தலைவராக அந்த அரசாங்கம் நியமித் தது. இந்த நடவடிக்கையை மேற் கொண்டபோது அப்போதைய நீதி அமைச்சர் தனது பதவியை இராஜி நாமா செய்யவும் முயற்சித்தார்.

அதேபோன்று கொவிட் தொற்றில் மரணிப்பவர்களை எரிப்பதற்கு விஞ் ஞான ரீதியில் எந்த அடிப்படையும் இல்லாத நிலையில், அரசியல் ரீதியில் எடுத்த தீர்மானத்தின் அடையிலேயே சடலங்களை எரிக்க தீர்மானித்தனர். இதன் மூலம் முஸ்லிம் மக்களை நோவிப்பதே அரசாங்கத்தின் நோக்க மாக இருந்தது - என்றார்.

## கிழக்கையும்...

நேற்று பாராளுமன்றில் வரவு - செலவு திட்ட உரையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அத்துடன்,

அரசியல் தீர்வுக்கு அனைத்து கட்சி களுக்கும் அழைப்பு விடுப்பதாக தமிழ் அரசுக் கட்சி கூறியது. ஆனால், பேச்சில் என்ன நடந்தது என்பதில் வெளிப் படைத்தன்மை இல்லை. நீண்ட அழிவு கள், இழப்புக்கள் தொடர்பில் நாம் விமர் சனங்களை முன்வைத்து வருகின்றோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ சொன்னது போல் 13 பிளஸி லிருந்துதான் ஆரம்பிக்கப் போகின் றோமா? அது தொடர்பில் கட்சிகளி டம் ஒற்றுமை வந்துள்ளதா?அல்லது வைரமுத்து சொன்னதுபோல் பட்டு வேட்டி கனவில் இருக்கின்றபோது கட் டியிருக்கின்ற கோவணமும் கள வாடப் பட்ட கதையாக மாற போகின்றதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல் லாட்சி காலத்தில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகக் கேட்டுக்கொண்டிருக் கும் போதுதான் அரசமைப்பில் உறுதிப் படுத்தப்பட்டுள்ள மாகாண சபை முறை மைகள் கை நழுவி போயின. இந்த அரசும் தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இல்லை என்ற விடயம் இருந்தா லும் அந்த நேரத்தில் இது பெரும் பிரச்னை யாக எழும் என்று சரியாக ஆராய்ந்து பார்க்கப்படாது எடுக்கப் பட்ட முடிவு காரணமாக மாகாண சபைத் தேர்தல் இன்று வரை நடக்க வில்லை.

அதிகாரம், அதிகாரம்.... என்கின் றோம். ஆனால், அரசமைப்பில் உறுதிப் படுத்தப்பட்ட மாகாண சபை அதி காரத்தைத் தக்கவைத்துக்கொண்டு அதைத்தாண்டி 13 பிளஸ் பற்றி பேசக் கூடிய ஒற்றுமை தமிழ் கட்சிகளிடம் வந்தால்தான் அது பெரும் பலம் என் பது எனது நிலைப்பாடு.

இல்லை என்றால் கட்சிகளுக்குள் பிளவு களையும் பிரச்னைகளையும் ஏற் டுத்திக்கொண்டு ஊடகங்களுக் கான கருத்துக்களையும் அடுத்த தேர்தலில் வெல்லக்கூடிய கருத்துக் களையும் கூறிக்கொண்டிருப்போம்.

இறுதியில் தற்போதுள்ள சூழலை யும் பயன்படுத்தாமல் விட வேண்டி யேற்படும். 70 ஆண்டுகளாக நீடிக்கின்ற இந்த பிரச்னையில் அரசியலுக்காக அல்லது அடுத்த ஆட்சியை பிடிப்பதற் காக வருகின்ற தலைவர்கள் அதனை சரியாகப் பயன்படுத்தி இனவாதத்தை கிளப்பி விட்டால் அதன் மூலம் மீண் டும் பிரச்னைகள் எழும் நம்பிக்கை தரக் கூடிய தீர்வுகளை நாம் தெளிவான பார்வையோடு சிங்கள மக்களுக்கு முன் வைக்க வேண்டும். சிங்கள மக்களோடு, சிங்கள தலைவர்களோடு பேச வேண்டு மெனக்கூறிக்கொண்டு கடந்த கால கசப்புகளை அதனூடாக வரும் வெறுப்புகளை மோசமான வார்த்தைக ளால் உணர்வுகளைத் தட்டி எழுப்பிப் பேசி சிங்கள மக்கள் மத்தியில் காயங் களை ஏற்படுத்தக்கூடாது .

அதுபோன்று அவ்வாறான கருத்துக் களுக்கு இங்குள்ள அரச தரப்பினர் பதி லளிப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக் களின் மனங்களில் காயங்களை ஏற்படுத் தக்கூடாது. ஆனால், அப்படியான உரை யாடல்கள்தான் இடம் பெறுகின்றன.

வடக்கில் உள்ள தலைவர்கள் உண் மையான இணக்கப்பாட்டோடு கிழக்கு மக்களையும் இணையாக நடத்தக்கூடிய திட்டமிடலோடு தெளிவான அரசியல் தீர்கோடு பயணித்தால் அதற்கான திட்ட வரைவை எமக்கு முன்வைத்தால் நாம் நிச்சயம் அவ்வா றான தீர்வு முயற்சிக்கு தடையாக இருக்க மாட்டோம்.

அப்படியான சூழல் வந்து தென்பகு தியின் எழுச்சிக்கு முகம் கொடுக்கக் கூடிய சூழலை உருவாக்க வேண்டுமென் றால் நாம் இப்போதிருக்கின்ற நிலை மையிலிருந்து விடுபட்டு மாற்று சிந்த னையை கூட பரிசீலிப்பதற்குத் தயார். திட்டமிட்டு நாம் காய் நகர்த்தி னால் தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வைப் பெற முடியும் - என்றார். (ஐ)

## வியட்நாமில்...

நடத்துவதாக வெளிவிவகார அலி சப்ரி தெரிவித்தார்.

மேலும், வியட்நாமில் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் 85 பேர் இலங்கைக்கு வருவதற்கு இணக் கம் தெரிவித்துள்ளனர். இவர்களை இரு வாரங்களில் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என் றும் அவர் கூறினார்.

பாராளுமன்றில் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர் பான வரவு - செலவு திட்ட விவாதம் நேற்று திங்கட்கிழமை நடந்தது.

அங்கு உரையாற்றிய தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்,

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கனடா செல்லும் நோக்கில் சுமார் 300இற்கும் அதிகமான இலங் கையர்கள் கப்பலில் சென்ற போது விபத்துக்குள்ளாகி தத்தளித்தவர்கள் தற்போது வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 37 வயதுடைய சுந்தரலிங்கம் கிரிதரன் என்பவர் தற்கொலை செய்துகொண்டார். அவ ரின் உடல் அங்கேயே இருக்கின்றது. அந்த உடலத்தை இங்கே கொண்டு வர 30 இலட்சம் ரூபாய் செலவாகும் என் கின்றனர்.

அவரின் மனைவியும் பிள்ளைகளும் அவருடைய முகத்தைப் பார்க்க விரும் புகின்றனர். அவர்கள் வறுமையில் இருக்கின்றனர். புலம்பெயர்ந்தவர்கள் அதற்காக உதவ தயாராக இருக்கின்ற னர். அவரின் உடலை கொண்டு வருவ தற்கு என்ன செய்யலாம்? இதற்கான வழி என்ன என்று வெளிவிவகாரத் துறை அமைச்சரிடம் கேள்வி எழுப் பினார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி,

இந்த விடயம் தொடர்பில் வியட்ந ாமில் உள்ள இலங்கை தூதுவருடன் கலந்துரையாடினேன். 303 பேர் அங்கு தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர் களில் 2 பேர் மதுசாரம் கொண்ட கை கழுவும் திரவத்தை குடித்துள்ளனர். ஒருவர் உயிரிழந்தார். 303 பேரில் 85 பேர் இலங்கைக்கு வருகை தர இணக் கம் தெரிவித்துள்ளனர். இவர்களை இன்னும் இரு வார காலத்திற்குள் இலங்கைக்கு அழைத்து வர நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வர முடியாது என்று கூறுபவர்கள் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை அவர்களிடம் விசாரணை நடத்தும். அது நீண்ட தொரு வழிமுறையாகும்.

இந்நிலையில் இறந்தவரின் உடலை கொண்டு வருவதற்கு 30 இலட்சம் ரூபாய் நிதியை எங்களுக்கு செலுத்த அனுமதியில்லை. அது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். இல்லாவிட் டால் அங்கேயே அடக்கம் செய்ய வேண்டும். இது குறித்து குடும்பத் தரப் பில் இருந்து பதில் வரும் வரையில் காத்திருக்கின்றோம் - என்றார்.

இதன்போது மீண்டும் கருத்துரைத்த சிறீதரன், உயிரிழந்தவரின் குடும்பம் மிகவும் வறுமை நிலையில் உள்ளது. 30 இலட்சம் செலுத்தும் நிலையில் அவர் கள் இல்லை. இவ்விடயத்தில் புலம் பெயர் தமிழர்கள் உதவ தயாராக உள் ளார்கள். ஆகவே, இதற்கு ஒரு வழி முறையை கையாண்டு, உடலை கொண்டு வர நடவடிக்கை எடுங்கள், அவரின் பிள்ளைகளின் கோரிக்கையை நிறை வேற்றுங்கள்.

நாட்டின் பொருளாதார பாதிப்பால் நாடு கடந்து செல்பவர்கள் தொடர்பில் சர்வதேச நிறுவனங்கள் மனிதாபிமா னத்துடன் செயல்பட வேண்டும் - என் றும் கூறினார். (ஐ)

## ஜனவரியிலேயே...

8ஆம் திகதி புதிய அமைச்சரவை நிய மிக்கப்பட வேண்டும் என்று பஸில் வலி யுறுத்தினார்.

ஆனால், அமைச்சரவையை மாற்றிய மைப்பதற்கான நேரம் இதுவல்ல. எதிர் வரும் ஜனவரி மாதம் அதனைச் செய்ய முடியும் என்று ஜனாதிபதி பஸில் ராஜ பக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார் என்றும் அறிய வருகிறது. (ஐ-சி)

## 25 இந்திய...

வந்தவர்களே இவ் வாறு கைது செய் யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் அனைவரையும் இன்று செவ்வாய்க் கிழமை பொலிஸார் ஊடாக ஊர்காவற் றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற் படை தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

## ஜனாதிபதியை...

அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், புதிய அரசமைப்பின் ஊடாக இனப் பிரச்னைக்கு தீர்வு வழங் கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள் ளது. குறிப்பாக, அடுத்த சுதந்திர தினத் துக்கு முன்னர் தீர்வை வழங்கப் போவ தாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கூட்டிணைந்த அடிப்படையில் அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்துள் ளன. மூன்றில் இரண்டு பெரும்பான் மைப் பலத்தை கொண்ட அரசாங்கம் இருந்திருக்கிறது. இந்த அரசாங்கங்கள் எல்லாம் இனப் பிரச்னைக்கு தீர்வு பெற் றுக்கொடுக்க முயற்சிகளை மேற் கொண்டன. ஆனால், இந்த அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந் தன.

இவ்வாறான நிலையில் அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்னைக்கு தீர்வை வழங்க முடியும் என எவராலும் நம்ப முடியுமா? உலகில் உள்ள எவரும் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை கருத்தில் கொள்வார்களா? சர்வதேசத்தை ஏமாற்றும் செயல்பாடு களே தொடர்ந்த வண்ணம் உள்ளன - என்றும் கூறினார். (ஐ)

## போர்...

பாராளுமன்றத்தில் நேற்று உரை யாற்றிய அவர், பிளவுபடாத மற்றும் நடுநிலையான வெளிவிவகார கொள் கையின் தன்மைக்கு பாதிப்பு ஏற் படாத வகையில் தற்போதைய பொரு ளாதார பாதிப்புக்கு தீர்வு காணும் வகையில் வெளிவிவகார கொள்கை யின் குறுகிய மற்றும் நீண்டகால கொள்கையில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட் டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வ தற்கான கடன் மறுசீரமைப்பு பேச்சில் வெளிவிவகாரத் துறை அமைச்சு நிதியமைச்சுடன் ஒன்றிணைந்து செயற்படுகிறது. குடன் கடன் மறுசீரமைப்புக்கான சட்டம் மற்றும் நிதி ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு யுத்தம் வெற்றிக் கொள்ளப்பட்டாலும்,நாட்டில் சமாதானம் கட்டியெழுப்பப்பட வில்லை. அனைவருக்கமான நாட்டை உருவாக்க வேண்டிய சூழல் தோற்றம் பெற்றுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தில் ஒருசில திருத்தம் செய்யப் பட்டுள்ளதால் பல ஆண்டு காலம் சிறையில் இருந்த தமிழர்களை விடு தலை செய்ய முடிந்தது.எதிர்வரும் நாட்களில் பயங்கரவாத தடைச்சட் டத்திற்கு பதிலாக புதிய சட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது- என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## உலகக் கிண்ண உதைபந்து; ஆர்ஜென்ரீனா அணி வெற்றி!



டோஹா, நவ. 29

ஆர்ஜென்ரீனா தனது 2ஆவது ஆட்டத்தில் 2-0 என்ற கோல் கணக்கில் மெக்ஸிகோவை வீழ்த்தியது.

முதல் போட்டியில் சவூதி அரேபியாவிடம் தோற்று அதிர்ச்சியில் இருந்த ஆர்ஜென்ரீனா, இந்தப் போட்டியில்,வென்றதன் மூலம் 16 அணிகள் சுற்றுக்குத் தகுதிபெறுவதற்கான பந்தயத்தில் தன்னைத் தக்க வைத்துள்ளது. முதல் போட்டியை சமன் செய்திருந்த மெக்ஸிகோ, தற்போது மேலும் பின்னடைவைச் சந்தித்தது.

பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் ஆட்டத்தின் தோல்வியிலிருந்து மீள்வதற்கான முனைப்புடன் ஆடியது ஆர்ஜென்ரீனா. ஆனால், அந்த முயற்சிகளுக்கான பலனை அவ்வளவு எளிதாக மெக்ஸிகோ விட்டுக் கொடுக்கவில்லை. எனினும் 9ஆவது நிமிடத்தில் கிடைத்த ப்றீ கிக் வாய்ப்பை அந்த அணி வீணடித்தது.

முதல் பாதி ஆட்டம் கோல் எதுவும் அடிக்கப்படாமல் நிறைவடைந்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் ப்றீ கிக் வாய்ப்புகள் பல கிடைத்தும் இரு அணிகளுமே கோட்டை விட்டன.

இறுதியாக, முதல் கோலை மெஸ்ஸி 64-ஆவது நிமிடத்தில் அடித்தார். ஏஞ்சல் டி மரியாவிடமிருந்து தட்டிக் கொடுத் பந்தைப் பெற்ற மெஸ்ஸி, கோல் கம்பத்திலிருந்து 25 மீற்றர் தொலைவில் நின்றபடியே கம்பத்தின் வலதுபக்க கீழ்பகுதிக்குள்ளாக பந்தை உதைத்து கோல் காப்பாளர் பந்தை எட்ட முடியாத வகையில் கோலடித்து அசத்தினார்.

இதனால், ஆட்டம் விறுவிறுப்பாக, 87ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவுக்கு 2ஆவது கோல் வாய்ப்பும் கிடைத்தது. இறுதிவரை இந்த முன்னிலையை தக்க வைத்துக் கொண்ட ஆர்ஜென்ரீனா கடைசியில் வெற்றி பெற்றது.



## உலக கிண்ண உதைபந்து; பிரேசில், கானா வெற்றி!

டோஹா, நவ. 29

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் பிரேசில், கானா நாடுகளின் அணிகள் வெற்றி பெற்றுள்ளன. இதனிடையே கமரூன், சேர்பியா அணிகளின் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

கட்டாரில் நடக்கும் உலகக் கிணண உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடந்த போட்டிகளில், கமரூன், சேர்பியா அணிகள் மோதின. இதில், இரு அணிகளும் தலா 3 கோல்களை அடித்ததால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

மற்றொரு போட்டியில் தென் கொரியா - கானா அணிகள் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் 2 - 0 என்ற கணக்கில் கானா முன்னிலையில் இருந்தது. ஆனாலும், இரண்டாவது பாதியில் இரு கோல்களை அடித்து சமநிலைப் படுத்தியது தென்கொரியா. எனினும், 68ஆவது நிமிடத்தில் மூன்றாவது கோலை அடித்து வெற்றி பெற்றது கானா அணி.

இதேபோன்று, பிரேசில் - சுவிற்சர்லாந்து அணிகள் மோதிய போட்டியில் பிரேசில் 1 - 0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் 83ஆவது நிமிடத்தில் பிரேசில் அணிக்காக காஷ்மிரோ கோல் அடித்தார். இதன்மூலமே பிரேசில் வெற்றி பெற்றது.

(ஐ)

## ஸ்பெயினுடனான போட்டி சமன் ஜேர்மனிக்கான வாய்ப்பு கடினம்

டோஹா, நவ. 29

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று நடந்த ஜேர்மனி, ஸ்பெயின் அணிகளின் மோதல் சமநிலையில் முடிவடைந்தது. இதனால், ஜேர்மனி 16 அணிகளின் சுற்றுக்கு முன்னேறுவது கடினமாக மாறியுள்ளது.

பிபா உலகக் கிண்ணத் தொடர் கட்டாரில் நடக்கிறது. இதில் டோஹாவில் நேற்று நடந்த போட்டியில் இ பிரிவு அணிகளான ஸ்பெயின் ஜேர்மனி மோதின.

போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

பின்னர் பரபரப்பாக தொடங்கிய இரண்டாவது பாதியில் - 62ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் அல்வாரோ மொராடா தனது அணிக்கான முதல் கோலை அடித்து அசத்தினார். இதனால் ஆட்டம் ஸ்பெயின் அணிக்கு சாதகமானது.



இந்த சூழலில் ஸ்பெயின் அணிக்கு பதிலடியாக ஆட்டத்தின் 83ஆவது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் நிக்லஸ் புல்க்ரக் கோல் அடித்து அசத்தினார். தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் மேற்கொண்டு கோல் ஏதும் அடிக்கவில்லை. இதனால், போட்டி 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

ஸ்பெயின் நான்கு புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. ஜப்பான் இரண்டாமிடத்திலும் உள்ளன. ஜப்பானுக்கு எதிரான தொடக்க ஆட்டத்தில் 2-1 என்ற கணக்கில் தோல்வியடைந்த ஜேர்மனி, ஒரு புள்ளியுடன் கடைசி இடத்தில் உள்ளது. (ஐ)

## புதிய விடியல் உதைபந்தாட்ட தொடர் பாடும்மீன், அன்ரனீஸ், மேரிஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், நவ. 29

புதிய விடியல் உதைபந்தாட்ட போட்டியில் பாடும் மீன், சென். அன்ரனிஸ், சென். மேரிஸ் அணிகள் வெற்றி பெற்றன.

டான் தொலைக்காட்சி குழுமம் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்குடன் இணைந்து புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரை நடத்துகிறது.

துரையப்பா பொது விளையாட்டரங்கில் நேற்று நடந்த போட்டிகளில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் சென். சேவியர் கழகமும் மோதின. இதில், பாடும்மீன் அணி 4 - 0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றது.

அடுத்து நடந்த பாசையூர் சென். அன்ரனீஸ் - உடுப்பிட்டி நவஜீவன் அணிகளின் மோதலில் 2 - 0 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் வெற்றி பெற்றது. அடுத்து நடந்த நாவாந்துறை சென். மேரிஸ் அல் வாய் மனோகரா அணிகள் மோதிய போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இதனால், சமநிலை தவிர்ப்பு உதை (பெனால்டி) மூலம் வெற்றி தோல்வியை கணிக்கப்பட்டது. இதில், 4 - 2 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றி பெற்றது.

இன்றைய போட்டிகள்

இன்று செவ்வாய்க்கிழமை துரையப்பா விளையாட்டரங்கில் நடக்கும் போட்டிகளில், 3.30 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து சென். பிலிப்ஸ் அணியும், 4.45 மணிக்கு சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணியும் மோதுகின்றன. (ஐ)

**தேவை**

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விளம்பர பகுதியில் பணியாற்றுவதற்கு ஆட்கள் தேவை.
(பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :
077 311 9298, 075 313 2805

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.